பக்கங்கள்:-32

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | தை 27 | செவ்வாய்க்கிழமை | 24.02.2026 | அதிர்வு 208

## ஒரே நாளில் இருவர் யானைகள் தாக்கி பரிதாப உயிரிழப்பு!



இலங்கையின் பொலன்னறுவை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இடம்பெற்ற இரு வேறு காட்டு யானை தாக்குதல் சம்பவங்களில் இளைஞர் ஒருவரும், முதியவர் ஒருவரும் உயிரிழந்துள்ளனர் என்று 06




**வுல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்தை யாராலும் ஏமாற்ற முடியாது**

# ரணிலின் லண்டன் விஜயம் உத்தியோகபூர்வ பயணம்!

**ஆதாரங்களை ஊடகங்கள் முன்பாக வெளியிட்டு ஹரின் அதிரடி**
**அநுர அரசின் முடிவுக்கான ஆரம்பம் இதுவே என்றும் எச்சரிக்கை**

"முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு லண்டன் வுல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகம் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்திருந்தது உண்மை. அதற்கான ஆதாரங்கள் இதோ உள்ளன." - என்று முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் உப பொதுச்செயலாளருமான ஹரின் பெர்னாண்டோ அழைப்பிதழை ஊடகங்களுக்குக் காண்பித்து விளக்கமளித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 06

# லண்டனில் நாமலுக்கு விழுந்தது சர்வதேச அடி

**நீதி அமைச்சர் ஹர்ஷண கடும் சாடல்**



லண்டனுக்கு விஜயம் செய்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் உரைகள் அடுத்தடுத்து இரத்துச்செய்யப்பட்டமையானது, கடந்த காலங்களில் ராஜபக்ஷ குடும்பத்தினர் முன்னெடுத்த அரசியலுக்கு சர்வதேச சமூகம் வழங்கிய பதிலடி என்று நீதி அமைச்சர் ஹர்ஷண நாணாயக்கார தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

"நாமல் ராஜபக்ஷ போன்றவர்கள் இலங்கையில் எத்தகைய அரசியலை முன்னெடுத்தார்கள் என்பதை உலகம் இன்று நன்கு 06




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு எடுத்த முடிவின் காரணமாக தமது கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவியை இழந்திருக்கும் சிவஞானம் சிறிதரன் அந்த அரசியல் குழு தொடர்பான விவரங்களைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தை எழுத்து மூலம் கோரியிருக்கின்றார்.

இது தொடர்பாகக் கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திற்குத் தாம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அரசியல் குழுவின் வழிகாட்டு விதிகள், ஒழுக்கக் கோவை மற்றும் அண்மையில் நடைபெற்ற அரசியல் குழுவின் கூட்டங்களின் அறிக்கைகள் போன்றவற்றை தமக்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டிருக்கிறார்.

உண்மையில் கட்சியின் ஆவணங்கள், அறிக்கை பதிவுகள் போன்றவற்றுக்கு பொறுப்பானவர் கட்சியின் பொதுச் செயலாளர்தான். தலைவர் அல்லர்.

ஆக, கட்சியின் பொதுச் செயலாளரான சுமந்திரனிடம் பெற்றுக் கொள்ள வேண்டிய 06

# நிலக்கரி தரமற்றது என்பது உண்மை!

## பகிரங்கமாக ஒப்புக்கொண்டார் அமைச்சர் லால் காந்த ஆனால் ஊழல், மோசடி இல்லை என்றும் அவர் திட்டவட்டம்



இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி தரம் குறைந்தவை என்ற குற்றச்சாட்டில் உண்மை இருக்கின்றது என்று அமைச்சர் கே.டீ.லால் காந்த இன்று பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். இருப்பினும், இந்த நிலக்கரி விநியோக டெண்டர் நடைமுறையில் எவ்வித மோசடியும் அல்லது ஊழலும் இடம்பெறவில்லை என்று அவர் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகவியலாளர்கள் முன்பாகப் பேசிய அமைச்சர், இது தொடர்பாக எழும்குற்றச்சாட்டுகள்வெறும்ஆதாரமற்ற வதந்திகளே என்று குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தரமற்ற நிலக்கரி விநியோகிக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டு உண்மையானது. அதில் மாற்றுக்கருத்து இல்லை.

தரக்குறைபாடு ஏற்பட்டிருந்தாலும், அந்தப் டெண்டர் வழங்கப்பட்ட விதத்தில் முறைகேடுகளோ அல்லது ஊழலோ இடம்பெறவில்லை.

தரமற்ற நிலக்கரியால் அரசுக்கு ஏற்படும் நட்டத்தை அறவிடுவதற்கு முறையான பொறிமுறையும் அளவுகோல்களும் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன. அந்த விதிகளின்படி உரிய இழப்பீடு வசூலிக்கப்படும்.

கடந்த கால அரசுகளைப் போல அமைச்சரவை தீர்மானங்களின் ஊடாக தன்னிச்சையாக விநியோகஸ்தர்களைத் தெரிவு செய்யாமல், தற்போது மிகவும் வெளிப்படையான விலைமனு கோரல் நடைமுறைகளையே அரசு பின்பற்றி வருகின்றது." – என்றார்.

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்துக்காகக் கொண்டுவரப்பட்ட நிலக்கரி நிர்ணயிக்கப்பட்ட தரத்தை விட குறைவாக இருப்பதாக அண்மைய நாட்களில் பெரும் சர்ச்சை எழுந்திருந்தது. இதனால் மின் உற்பத்தித் திறன் குறைவதாகவும், இயந்திரங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வந்தன.

அமைச்சர் கே.டீ.லால் காந்தவின் மேற்படி கருத்து, தொழில்நுட்ப ரீதியான தவறுகளை ஒப்புக்கொண்டாலும், அரசியல் ரீதியான ஊழல் குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரிக்கும் வகையில் அமைந்துள்ளது.

# அமரகீர்த்தி அத்துகோரள கொலை வழக்கு:

## மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு முன் கண்ணீர் போராட்டம்!

### பொதுமன்னிப்பு வழங்குமாறு வேண்டுகோள்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட 12 பேரின் உறவினர்கள் நேற்று காலை ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

தமது குடும்பங்களுக்கு இழைக்கப்பட்டுள்ள "பாரிய அநீதிகள்" குறித்து ஜனாதிபதி தலையிட வேண்டும் என வலியுறுத்தி, அவர்கள் மனு ஒன்றையும் கையளித்தனர்.

போராட்டக்காரர்களில் ஒரு குழுவினர் பின்னர் ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவருடன் கலந்துரையாடலில் ஈடுபட அனுமதிக்கப்பட்டனர்.

நீதிமன்றத்தீர்ப்புக்குஎதிராகமேன்முறையீடுசெய்யவுள்ளதாகவும், அதேவேளை ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி இந்த வழக்கை மீண்டும் ஒருமுறை மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தண்டனை பெற்றவர்களில் ஒருவரின் மனைவி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

"எனது கணவர் மட்டுமே எங்கள் குடும்பத்தின் ஒரே வருமான ஈட்டுபவர். ஐந்து குழந்தைகள் மற்றும் வயதான உறவினர்களை அவரே கவனித்து வந்தார். அவர் கைது செய்யப்பட்டதில் இருந்து நாங்கள் வாடகை வீட்டில் சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறோம்." – என்று கண்ணீருடன் தெரிவித்தார்.

தண்டனை விதிக்கப்பட்டவர்களில் ஒருவர், தாம் எந்தத் தவறும் செய்யவில்லை எனத் தொடர்ந்து கூறி வந்ததாக அவரது உறவினர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த வாரம் இந்த வழக்கில் தீர்ப்பளித்த நீதிமன்றம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள மற்றும் அவரது மெய்க்காப்பாளர் கொல்லப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய 12 பேருக்கு மரண தண்டனை விதித்திருந்தது. இந்தத் தீர்ப்பானது நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், தற்போது மனிதாபிமான அடிப்படையில் தமக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என அவர்களின் குடும்பத்தினர் கோரி வருகின்றனர்.

தமது அன்புக்குரியவர்களைக் காப்பாற்றுவதற்காக சட்ட ரீதியாகவும் மனிதாபிமான ரீதியாகவும் போராட்டங்களைத் தொடரப் போவதாக அவர்கள் இதன்போது தெரிவித்தனர்.



# மக்களால் தூக்கி வீசப்பட்டவர்களே தேர்தலை நடத்தக் கோரி ஒப்பாரி!

## மொட்டுக் கட்சியின் சவாலுக்கு அமைச்சர் சுனில் பதிலடி

கடந்த காலங்களில் ஊழல் மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்டு மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களே, தற்போது மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு "ஒப்பாரி" வைப்பதாக அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி சாடியுள்ளார்.

"துணிவிருந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள்" என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் விடுத்த சவாலுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"செப்டம்பர் 21ஆம் திகதி மக்கள் வழங்கிய தீர்ப்பு இன்னும் ஈரம் காயவில்லை. நீண்டகாலமாகத் தேர்தல்களை நடத்தாமல் முடக்கி வைத்திருந்தவர்கள், இன்று ஜனநாயகம் பற்றிப் பேசுவது வேடிக்கையானது. மக்கள் எதற்காக இந்த அரசைத் தெரிவு செய்தார்கள் என்பது எங்களுக்குத் தெரியும் அந்தப் பொறுப்பை நாம் சரியாக நிறைவேற்றி வருகின்றோம்.

தேர்தல்களைக் கண்டு அஞ்சும் தேவையோ அல்லது மக்கள் செல்வாக்கை இழந்துவிடுவோம் என்ற பயமோ இந்த அரசுக்கு இல்லை. முறையான காலத்தில், உரிய முறையில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும். சீர்குலைந்துள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதும், திருடப்பட்ட மக்கள் பணத்தை மீட்பதுமே எமது தற்போதைய முன்னுரிமையாகும்.

தவறு செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம். இதனைப் "பழிவாங்கல்" என்று கூச்சலிடுவதன் மூலம் எவரும் தப்பித்துக் கொள்ள முடியாது.

ராஜபக்ஷக்களின் நிழலில் இருந்து அரசியல் செய்தவர்கள், இப்போது மக்கள் செல்வாக்கு பற்றிப் பேசுவது நகைப்புக்குரியது. முடிந்தால் மீண்டும் மக்களிடம் சென்று ஆதரவைப் பெற்றுக்கொள்ளுங்கள்." – என்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி சவால் விடுத்தார்.

# பொருளாதாரத்தைச் சீரழித்தவர்கள் உலகுக்கு பாடம் எடுக்க முயற்சிப்பது வேடிக்கையானது!

## நாமல் குறித்து அமைச்சர் அநுர கருணாதிலக சாடல்



நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்தவர்கள் இன்று உலக நாடுகளுக்குப் பாடம் எடுக்க முயற்சிப்பது வேடிக்கையானது என்று அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்தார்.

லண்டனில் ஒக்ஸ்போர்ட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் நாமல் ராஜபக்ஷ நிகழ்த்தவிருந்த உரைகள் இரத்துச் செய்யப்பட்டமை குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:–

"சர்வதேசநாணயநிதியத்துடன்முறையாகப் பேச்சுகளை நடத்தி, நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்கும் அடித்தளத்தை நாம் இட்டுள்ளோம். ஆனால், அந்தப் பலன்களை அனுபவித்துக் கொண்டு ராஜபக்ஷ அணியினர் தேவையற்ற வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு நாட்டுக்குக் களங்கத்தை ஏற்படுத்துவது முறையற்ற செயலாகும்.

ஒரு தலைவருக்குரிய உண்மையான தகுதி என்பது வெறும் மேடைகளில் உரையாற்றுவது மாத்திரமல்ல. மக்கள் மத்தியில் அவர் கொண்டுள்ள நன்மதிப்பும் கௌரவமுமே மிக முக்கியமானது. அந்தப் பல்கலைக்கழகங்கள் நாமல் ராஜபக்ஷவின் உரைகளை இரத்துச் செய்தமையானது, சர்வதேச ரீதியில் அவர்களுக்கு இருக்கும் மதிப்பை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது."
– என்றார்.



# பௌத்த மாநாடு படுதோல்வி!

## எங்கு போராட்டம் நடந்தாலும் சஜித் அங்கு ஓடி வந்து அமர்வார் என்றும் அமைச்சர் நையாண்டி விமர்சனம்

அரசுக்குப் பாடம் கற்பிப்பதாகக் கூறிக் கொண்டு கொழும்பில் நடத்தப்பட்ட பௌத்த சங்க சம்மேளனம் படுதோல்வியடைந்துள்ளது என்று அமைச்சர் கே.டீ.லால் காந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"தேர்தல் காலங்களில் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய அனைத்துத் தரப்பினரும் இன்று நண்பர்களாகக் கைகோர்த்துள்ளார்கள்.

கடந்த கால ஊழல் மோசடிகள் மற்றும் படுகொலைகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்போது, அதைக் கண்டு அச்சமடைந்துள்ளவர்களே இன்று அரசுக்கு எதிராக ஒன்றிணைந்துள்ளனர்.

கொழும்பில் நடைபெற்ற பௌத்த சங்க சம்மேளனம் முழுமையான தோல்வியைத் தழுவியுள்ளது. ஒருசில பௌத்த பிக்குகள் தொடர்பில் மக்கள் மத்தியில் நல்ல அபிப்பிராயம் கிடையாது. இந்த மாநாட்டை எதற்காக நடத்தினார்கள் என்பது அதை ஏற்பாடு செய்தவர்களுக்கும் தெரியாது, அதில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவருக்கும் தெரியாது.

அரசுக்கு எதிராக எங்கு போராட்டமோ அல்லது மாநாடோ நடந்தாலும், அங்கு சென்று அமர்ந்துகொள்ள வேண்டும் என்ற மனநிலையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளார். குறுகிய அரசியல் இலாபத்துக்காக இத்தகைய தவறான செயற்பாடுகளுக்குத் துணை போக வேண்டாம் என்று அவரிடம் கேட்டுக்கொள்கின்றோம்." – என்றார்.

# நாடெங்கும் போதைப்பொருள்களுடன் ஒரே நாளில் 958 பேர் வசமாகச் சிக்கினர்



ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 958 பேர் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 7 பேரும், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைக்கமைய ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 968 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன்,05 பேர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப்பொருட்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அதற்கமைய, சந்தேகநபர்களிடமிருந்து, 435 கிராம் ஹெரோயின், 874 கிராம் ஐஸ், 7 கிலோகிராம் 319 கிராம் கஞ்சா, 89 ஆயிரத்து 747 கஞ்சா செடிகள், 4 கிராம் குஷ்ரக போதைப்பொருள், 43 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், ஆயிரத்து 740 போதை மாத்திரைகள், 337 கிராம் மதனமோதகம் மற்றும் 2 கிலோகிராம் 55 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# பிக்குகள் தானம் மட்டும் வாங்கிக்கொண்டு இங்கு அமைதியாக இருந்துவிட்டு முடியாது!

## அவர்களின் அரசியல் வரலாற்று ரீதியானது என்று அவதூறுகளைக் கண்டிக்கின்றது பொதுபலசேனா

செயற்பாட்டு அரசியலில் ஈடுபட்டுள்ள பௌத்த பிக்குகளை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் அடிப்படையற்ற விமர்சனங்கள் மற்றும் அவதூறுகளை பொதுபலசேனா அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

கொழும்பு, இராஜகிரியவில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அந்த அமைப்பின் பொதுச்செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது:-

"பௌத்த பிக்குகள் என்பவர்கள் வெறும் தானத்தை மட்டும் பெற்றுக் கொண்டு அமைதியாக இருக்க வேண்டியவர்கள் அல்லர். நாட்டின் பாதுகாப்புக்காக முன்வருவது பிக்குகளின் வரலாற்று ரீதியான கடமையாகும். சோழர்கள், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர் போன்ற ஆக்கிரமிப்பாளர்களால் கூட சிங்கள பிக்குகளின் செல்வாக்கைச் சிதைக்க முடியவில்லை.

தற்போதைய அரசு மட்டுமன்றி, கடந்த கால அரசுகளிலும் பிக்குகளின் அரசியல் பங்களிப்பு காத்திரமாக இருந்தது. ஜே.ஆர். ஜயவர்தன மற்றும் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க ஆகியோரின் காலப்பகுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஹன்சாட் அறிக்கைகளே இதற்குச் சான்றாகும். நாட்டின் பாதுகாப்பும் பௌத்த மதமும் பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளன.

எம்மை இனவாதிகள் என முத்திரை குத்தி நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பதை நிறுத்த வேண்டும். தற்போது எனக்கு எதிராகப் பல அரசியல் வழக்குகள் தொடுக்கப்பட்டு, வெளிநாட்டுப் பயணக் கடவுச்சீட்டும் முடக்கப்பட்டுள்ளது. உண்மைத் தகவல்களைச் சமூகத்துக்குக் கொண்டு செல்ல முடியாதவாறு அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டுள்ளன.

எமக்கு எதிரான சட்டப் போராட்டங்களை முன்னெடுக்கவும், விகாரையைப் புனரமைக்கவும் போதிய நிதி வசதி இல்லை. இதற்காக "ஜாதிக பின்கெட" (தேசிய புண்ணியத் தராசு) எனும் பெயரில் புதிய வங்கிக் கணக்கொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நீதிப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க விரும்புவோர், ஆகக்குறைந்தது 100 ரூபாவையேனும் அந்தக் கணக்கில் வைப்பிலிட்டு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்." - என்றார்.

## மொரட்டுவை கடற்கரையில் நேற்று

# பெண்ணின் சடலம் மீட்பு! மூன்று பெண்கள் கைது!!

### பொலிஸார் தீவிர விசாரணை

மொரட்டுவை, கொரலவெல்ல ஜுபிலி வீதி கடற்கரைப் பகுதியில் நேற்று பெண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் மொரட்டுவை, கொரலவெல்ல பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரது மரணம் தொடர்பான மர்மத்தைக் கண்டறிய மொரட்டுவை பொலிஸார் விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இந்த மரணம் ஒரு திட்டமிடப்பட்ட படுகொலையா என்ற சந்தேகத்தின் அடிப்படையில் முதற்கட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்த பெண்ணுடன் அண்மையில் தனிப்பட்ட தகராறில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மூன்று பெண்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தற்போது அவர்களிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டு வருகின்றன.

மேற்படி பெண் தனிப்பட்ட குரோதம் காரணமாகக் கொலை செய்யப்பட்டாரா அல்லது கடலில் குதித்துத் தற்கொலை



செய்துகொண்டாரா என்பது குறித்துப் பொலிஸார் பல கோணங்களில் ஆராய்ந்து வருகின்றனர்.

"மரணத்துக்கான உண்மையான காரணம் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையின் பின்னரே உறுதிப்படுத்தப்படும்" என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மொரட்டுவை பொலிஸார் மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அறிக்கை மற்றும் விடயங்கள் தொடர்பில் பொதுச் செயலாளரைக் கேட்காமல் கட்சியின் தலைவரை கேட்டிருக்கிறார் 16 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கும் சிறிதரன்.

கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவான பிரதேச சபைத் தலவர்களின் பெயர்களை கட்சிச் செயலாளர் என்ற முறையில் உறுதிப்படுத்தும் ஆவணத்தில் கையொப்பம் இடுவது வரையான விடயங்களில் சுமந்திரனின் பொதுச் செயலாளர் என்ற பங்களிப்பை ஏற்று இதுவரைக்கு செயற்பட்ட சிறிதரன், இப்போது சுமந்திரனைக் கட்சியின் பொதுச் செயலாளர் என்ற பதவி நிலையில் தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சில இடங்களில் கருத்து வெளியிட்டு வருகிறார்.

அதனால்தான் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் தொடர்பான அறிக்கையை சுமந்திரனிடம் கேட்காமல் கட்சித் தலைவரிடம் அவர் கேட்டிருக்கின்றார் போலும்.

அவர் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், இன்றைய நிலையில் சுமந்திரனைத்தான் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளராக தேர்தல் ஆணையம் ஏற்று அங்கீகரித்துள்ளது.

ஆகவே, பொதுச் செயலாளர் பதவியில் சுமந்திரனை ஏற்பதில்லை என்ற சிறிதரனின் தனிப்பட்ட முடிவு ஒரு வகையில் தனிப்பட்ட முடிவு மட்டும்தான். அதனை கட்சி ரீதியாக சிறிதரனால் ஏற்படுத்த முடியாது.

அது மாத்திரமல்ல. கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் சிறிதரனின் மேற்படி கோரிக்கை கடிதத்திற்குத் தாம் தனிப்பட்ட அலுவலாக வெளிநாட்டுக்கு செல்கின்றமையால் சிறிதரன் தனக்கு தேவையான விவரங்களை கட்சியின் பொதுச் செயலாளரிடம் கோரிப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சிறிதரனுக்கு வழிகாட்டிச் சென்றிருக்கிறார்.

ஆனால் அவரது வழிகாட்டல்படி கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனுக்கு இந்த விடயங்களை தருமாறு கேட்டுத் தாம் கடிதம் எழுதினால், அதன் மூலம் சுமந்திரனைத் தாம் கட்சியின் பொதுச் செயலாளராக ஏற்றுக் கொண்டு விட்டார் என்று அர்த்தம் நேரும் என்று சிறிதரன் எண்ணுகிறார் போலும்.

இப்போது சிறிதரன் இந்தியாவுக்குச் சென்றிருக்கின்றார் என்று ஒரு தகவல் வெளியாகியிருக்கின்றது. ஆயினும் கட்சியின் செயலாளருக்கு அது பற்றிய தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. சிறிதரனின் இந்திய விஜயம் தனிப்பட்டதாக இருந்தாலும் கூட, நாட்டை விட்டு வெளியேறும் சமயத்தில் தமது கட்சியின் உத்தியோகபூர்வ அதிகாரத்தை தலைமைக்கு அறிவிப்பது முக்கிய எம்.பி. ஒருவரின் தார்மீக கடப்பாடாகும். ஆனால் அதைக் கூட அவர் செய்யவில்லை என்று தெரிகிறது.

* * *

'மறவன்புலவுக்கு எதிராக சி.வி.கே. 50 கோடி ரூபா மான நஷ்ட வழக்கு; முன் ஆயத்தமாக சட்டத்தரணி மூலம் கோரிக்கைக் கடிதம்' என்ற தலைப்பில் நேற்று காலை முரசில் ஒரு செய்தி வெளியாகி இருந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், மறவன்புலவு க.சச்சிதானந்தத்திற்கு சட்டத்தரணி மூலம் அனுப்பி இருக்கும் நிபந்தனை கடிதம் பற்றிய செய்தி அது.

அந்த நிபந்தனைக் கடிதத்தை அனுப்பியவர் சிவஞானத்தின் சட்டத்தரணி கேசவன் சயந்தன் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அது தவறானது. அந்த நிபந்தனை கடிதத்தை சி.வி.கே.சிவஞானம் சார்பில் அனுப்பி வைத்தவர் சட்டத்தரணி சயந்தன் அல்லர், சட்டத்தரணி கீர்த்தனா அயூரன் எனத் தெரிய வருகிறது.

வாசகர்கள் இந்தத் தகவலை திருத்திக் கொள்ளக் கோருகிறேன்.

---

## லண்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அறிந்து வைத்துள்ளது. சர்வதேச சமூகம்இப்போதுமிகவும்விழிப்புடன்இருக்கின்றது. அதன் விளைவாகவே, கேம்பிரிட்ஜ் மற்றும் ஒக்ஸ்போர்ட் போன்ற புகழ் பெற்ற பல்கலைக்கழகங்கள்

அவருக்கு இடமளிக்க மறுத்துள்ளன.

ராஜபக்ஷக்களின் ஆட்சிக்காலத்தில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் கையாளப்பட்ட விதம் குறித்து சர்வதேச மாணவர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் மத்தியில் பாரிய விரக்தி நிலவுகின்றது. இந்த அதிருப்தியே நாமலின் உரைகள் இரத்துச் செய்யப்பட்டமைக்குப் பிரதான காரணமாகும்.

கேள்விகளுக்குப் பயப்படுபவர்கள் அல்லது மற்றவர்கள் கேள்வி கேட்கும் சூழலை உருவாக்காதவர்கள், இத்தகைய உயரிய கல்வி நிறுவனங்களில் உரையாற்றத் தகுதியற்றவர்கள். ஒரு ஜனநாயக நாட்டில் இது போன்ற எதிர்ப்புகள் எழும்போது, அந்த நாட்டு கல்வி நிறுவனங்கள் அதற்கு மதிப்பளிப்பது இயல்பான ஒன்றாகும்.

லண்டன் பல்கலைக்கழக மாணவர்கள் தமது பாதுகாப்பு மற்றும் சுதந்திரமான விவாதம் குறித்து கவலை தெரிவித்தது முற்றிலும் நியாயமானது. கடந்த கால கசப்பான அனுபவங்களே இத்தகைய போராட்டங்களுக்கு அடிப்படையாக அமைந்துள்ளன." – என்றார்.

---

## ஒரே நாளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

யானை – மனித மோதல் தீவிரமடைந்து வரும் நிலையில், ஒரே நாளில் இரு உயிர்கள் பறிபோயுள்ளமை அந்தந்தப் பகுதிகளில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

**மெதிரிகிரியவில்**
**இளம் விவசாயி பலி**

பொலன்னறுவை, மெதிரிகிரிய பிரதேசத்தில் தனது வயல் வேலைகளை முடித்து விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே 25 வயதுடைய இளம் விவசாயி காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். தாக்குதலின் வீரியம் காரணமாக அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மெதிரிகிரிய தெற்குப் பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞரின் திடீர் மரணம் அப்பகுதி விவசாயிகளிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

**பானம ஏரிக்கு அருகில்**
**முதியவர் மரணம்**

இதேவேளை, அம்பாறை – பானம பகுதியில் உள்ள ஏரிக்கு நீராடுவதற்காகச் சென்ற 71 வயதுடைய முதியவர் ஒருவர் காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

நீராடிவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போது புதருக்குள் மறைந்திருந்த யானை திடீரென அவரைத் தாக்கியுள்ளது.

பலத்த காயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட அவர், உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பானம தெற்குப் பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

---

## ரணிலின் லண்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது குறித்து ஹரின் பெர்னாண்டோ மேலும் கூறுகையில்:-

"சி.ஐ.டி. போன்ற நிறுவனங்களைச் சிலர் ஏமாற்றுவது போல், சர்வதேச தரம் வாய்ந்த வுல்வர்ஹாம்டன் பல்கலைக் கழகத்தை எவராலும் ஏமாற்ற முடியாது. பல லட்சம் ரூபா செலவு செய்து வழக்குக்காகத் தகவல் தேடுபவர்களுக்கு, இந்தத் தெளிவான அழைப்பிதழ் கண்ணுக்குத் தெரியாமல் போனது ஆச்சரியமாக உள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் அறிவு மற்றும் ஆளுமை மீதுள்ள பொறாமையாலேயே இத்தகைய வீணான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன.

முழு விமானத்தையே வாடகைக்கு எடுத்துக்கொண்டு உலக நாடுகளுக்குச் சுற்றுலா சென்ற ஜனாதிபதிகள் இருந்த நாட்டில், லண்டனுக்குச் சென்று வெறும் வெஜிடபிள் பிரியாணி சாப்பிட்டுத் தனது கடமையைச் செய்த ஒரு மனிதரை இன்று பழிவாங்கத் துடிக்கின்றார்கள். ரணில் விக்கிரமசிங்கவும் மைத்ரி விக்கிரமசிங்கவும் மேற்கொண்டது சாதாரண சுற்றுலா அல்ல, அது ஒரு கௌரவமான விஜயம்." – என்றார்.

தற்போதைய அரசின் போக்கு குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர்,

"ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அரசு தவறான பாதையில் பயணிக்கின்றது. இது அவர்களது ஆட்சியின் முடிவுக்கான ஆரம்பமாகவே நான் பார்க்கின்றேன். இன்னும் சில காலங்களில் அரச அதிகாரிகள் இந்த அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை நிறுத்திக்கொள்வார்கள். உயர் பதவிகளுக்காக இந்த அரசுக்குச் சார்பாகச் செயற்படும் சட்டத்தரணிகளும் ஒருநாள் ஓய்வுபெற வேண்டும் என்பதை நினைவில் கொள்ளட்டும்." – என்றார்.

# யாழ். பல்கலைக்கழகத்தில் கறுப்புக்கொடி விவகாரம்: 30 மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை?

இம்மாதம் 4ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஏற்றப்பட்டிருந்த தேசியக் கொடி இறக்கப்பட்டு, அதற்குப் பதிலாக கறுப்புக் கொடி ஏற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக 30 மாணவர்கள் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வட்டாரங்கள் தெரிவிக்கும் தகவல்களின்படி, இது தொடர்பான இறுதி முடிவு ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணை நடத்துமாறு இம்மாதம் 11ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தைக் கோரியிருந்தது. இதனைத் தொடர்ந்து, பல்கலைக்கழகத்தின் இன நல்லிணக்கப் பிரிவுக்குப் பொறுப்பான பேராசிரியர், மாணவர் ஒழுக்காற்று அதிகாரி மற்றும் தலைமைப் பாதுகாப்பு அதிகாரி ஆகியோரைக் கொண்ட குழுவொன்று விசாரணைகளை முன்னெடுத்தது.

குறித்த விசாரணை அறிக்கையானது கடந்த வாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

தேசிய புலனாய்வு முகவரியினால் வழங்கப்பட்ட வீடியோ காட்சிகள் மற்றும் புகைப்பட ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்துடன் நேரடியாகத் தொடர்புடையதாகக் கருதப்படும் இரண்டு மாணவர்கள் உட்பட 28 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகள் என மொத்தம் 30 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

2025ஆம் ஆண்டும் இதேபோன்ற சம்பவம் இடம்பெற்றபோது, பல்கலைக்கழக நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என ஆணைக்குழு அதிருப்தி வெளியிட்டிருந்தது. இதனால், இம்முறை கடுமையான நடவடிக்கைகளை எடுக்க ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

பல்கலைக்கழக மட்டத்தில் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது, மாணவர்களின்மனநிலைகுறித்துசிலஅவதானிப்புகள் அறிக்கையில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிகின்றது.

சிறுபான்மைத் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு உரிய மதிப்பு வழங்கப்படாத வரை, இலங்கையின் சுதந்திர தினம் தமிழர்களுக்கு உகந்த நாளல்ல என்பதை வெளிப்படுத்தவே இந்தச் செயலில் ஈடுபட்டதாக மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட கால அடிப்படையில் இனங்களுக்கிடையே நல்லுறவை மேம்படுத்தவும், நிரந்தரப் புரிந்துணர்வை ஏற்படுத்தவும் இவ்வாறான சம்பவங்களைத் தவிர்க்கும் வகையில் பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முடங்கிய திட்டங்கள்

அவசர அவசரமாக - முறையான திட்ட மதிப்பீடுகள், ஆராய்வுகள் இல்லாமல் - யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்தி அரசு பெருத்த ஆரவாரத்தோடு முன்னெடுத்த விளையாட்டுத் துறை தொடர்பான இரண்டு பாரிய நடவடிக்கைகளும் முட்டுச்சந்தியில் வந்து முடங்கி நிற்கின்றன.

ஏற்கனவே யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பதற்கு பெருத்த எடுப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விழாவைத் தொடர்ந்து, அவ்விடயம் நீதிமன்ற இக்கட்டில் சிக்கி உள்ளது. உள்ளக விளையாட்டு அரங்கை அங்கு அமைப்பதற்கு எதிராக யாழ் மாவட்ட நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடை பின்னர் கை வாங்கப்பட்டதாயினும், அந்த விவகாரம் இப்போது மாகாண மேன்முறையீட்டு நீதிமன்றத் தின் பரிசீலனையில் உள்ளது. அத்தகைய கட்டுமானத்துக்கு யாழ் மாநகர சபையும் இன்னமும் அனுமதி வழங்க மறுத்து இருக்கின்ற காரணத்தினால் அந்த உள்ளக விளையாட்டு அரங்கு அமைப்பு வேலைகள் தடைப்பட்டுள்ளன.

அதேபோன்று ஜனாதிபதியின் பிரசன்னத்துடன் ஆரவாரமாக யாழ்ப்பாணம் மண்டைதீவில் தொடங்கிய கிரிக்கெட் மைதான அமைப்பு வேலைகளும் இப்போது இக்கட்டில் சிக்கி உள்ளன.

மண்டைதீவு தீவில் முன்மொழியப்பட்ட யாழ்ப்பாண சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் விளையாட்டு வளாகம் தொடர்பான அனைத்து கட்டுமான நடவடிக்கைகளும் சுற்றுச்சூழல் ஒப்புதல் செயல்முறை முடியும் வரை நிறுத்தப்பட வேண்டும் என்று மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

மைதானத்திற்காக ஒதுக்கப்பட்ட 48 ஏக்கர் நிலம் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிக்குள் வரவில்லை என்பதை வனப் பாதுகாப்புத் துறை உறுதிப்படுத்தியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ள மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை இயக்குநர் நாயகம் கபில மகேஷ் ராஜபக்ஷ, ஆயினும் இந்தத் திட்டத்தினால் ஏற்படக் கூடிய சாத்தியமான சுற்றுச்சூழல் தாக்கங்களை மதிப்பிடும் முழுமையான சுற்றுச்சூழல் மதிப்பீட்டை சமர்ப்பிக்கும் வரை இந்தத் திட்டத்தை தொடர முடியாது என சிறிலங்கா கிரிக்கெட் அமைப்புக்கு அறிவுறுத்தியிருக்கின்றார்.

"சுற்றுச்சூழல் தாக்கத்தை சிறிலங்கா கிரிக்கெட் அமைப்பு மதிப்பிட்டு, அதனுடன் தொடர்புடைய அறிக்கைகளை எங்களிடம் சமர்ப்பித்த பின்னரே, மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை ஒப்புதல் வழங்குவது குறித்து முடிவு செய்யும். அதுவரை, அனைத்து தரை மட்ட நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படும்" என்று அவர் கூறினார்.

அந்த இடத்தில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என முறைப்பாடுகள் வந்தன என ராஜபக்ஷ குறிப்பிட்டார். இருப்பினும் சிறிலங்கா கிரிக்கெட் அமைப்பு இன்னும் சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை என்றார் அவர்.

முறைப்பாடுகளைத் தொடர்ந்து, மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை தனது யாழ்ப்பாண அலுவலகத்தை ஆய்வுகளை நடத்த அறிவுறுத்தியது. கட்டுமான நடவடிக்கைகள் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், சில மண் வேலைகள் நடந்தன என அதிகாரிகள் தெரிவித்தனர் என்றார் ராஜபக்ஷ

"சட்டப்படி சுற்றுச்சூழல் அனுமதி தேவைப்படும் திட்டங்களை அதற்கான ஒப்புதல் இல்லாமல் தொடர முடியாது. அதன்படி, தொடர்ச்சியான நடவடிக்கைகள் சட்டத்தை மீறுவதாகும் என்பதால், எந்தவொரு தொடர்ச்சியான பணிகளையும் நிறுத்துமாறு பெப்ரவரி 18 அன்று சிறிலங்கா கிரிக்கெட் அமைப்பு முறையாக அறிவுறுத்தப்பட்டது," என்று அவர் கூறினார்.

ஆக, வடக்கில் தேசிய மக்கள் சக்தி அரசு பெருத்த ஆரவாரத்தோடு முன்னெடுத்த விளையாட்டுத் துறை தொடர்பான இரண்டு பாரிய நடவடிக்கைகளும் இப்போது முட்டுச் சந்தியில் வந்து முடங்கி நிற்கின்றன என்பது முற்றிலும் சரியான கூற்றாகும்...!

# மாகாண சபைத் தேர்தலுக்கு விசேட செயற்குழு: தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் வரவேற்பு!

## அறிக்கை கிடைத்ததும் அடுத்தகட்ட நடவடிக்கை என்றும் அவர் தெரிவிப்பு



மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான தேர்தல் முறைமையைத் தீர்மானிக்க நாடாளுமன்றத்தில் விசேட செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளமையை வரவேற்பதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் விஜித் ஹேரத் தலைமையில் 12 உறுப்பினர்களைக் கொண்ட இந்த விசேட செயற்குழு நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

“மாகாண சபைத் தேர்தலை எந்த முறைமையில் நடத்துவது என்பது குறித்து ஆராய்ந்து விதப்புரைகளை வழங்க இந்தச் செயற்குழுவுக்கு முழு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள், அதாவது மே மாதத்துக்குள் இக்குழு தனது அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். அந்த அறிக்கை கிடைத்தவுடன், சட்ட ரீதியான அதிகாரத்தைப் பயன்படுத்தித் தேர்தலை நடத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுப்போம்.

1988ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தல் சட்டத்தைத் திருத்தி, 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கச் சட்டத்தின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட “கலப்பு தேர்தல் முறைமை”யினால் இழுபறிகள் நீடிக்கின்றன. இதற்கான எல்லை நிர்ணயப் பணிகள் இன்னும் பூர்த்தியாகாத காரணத்தால், மக்கள் பிரதிநிதிகள் இன்றி மாகாண சபைகள் இயங்கி வருகின்றன. எல்லை நிர்ணயப் பணிகள் முடியும் வரை பழைய விகிதாசார முறைமையிலேயே தேர்தலை நடத்தலாம் என ஏற்கனவே சில யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

பழைய முறையா அல்லது புதிய முறையா என்ற குழப்பத்துக்கு நாடாளுமன்றமே தீர்வு காண வேண்டும் என உயர்நீதிமன்றம் பலமுறை சுட்டிக்காட்டியுள்ளது. இந்த விசேட செயற்குழுவில் எமது ஆணைக்குழுவின் சார்பிலும் ஆக்கபூர்வமான யோசனைகளை முன்வைக்கவுள்ளோம்.

மாகாண சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளை விரைவில் நியமிக்க வேண்டும் என்பதில் தேர்தல்கள் ஆணைக்குழு உறுதியாக உள்ளது. அரசு எடுக்கும் சாதகமான தீர்மானங்களுக்கு நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.” - என்றார்.

# வடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றம் குறித்த திருத்தப்பட்ட பட்டியல் இன்று முதல் வெளியீடு

## கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் 2026ஆம் ஆண்டுக்கான வலயங்களுக்கிடையிலான வருடாந்த ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான திருத்தப்பட்ட பட்டியல்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் மூன்று கட்டங்களாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படவுள்ளது என்று வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை.ஜெயசந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2025ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் பிரசுரிக்கப்பட்ட வருடாந்த இடமாற்றத்துக்கான “சேவையின் தேவை கருதிய” இடமாற்றப் பட்டியலில் காணப்பட்ட குறைபாடுகள் சீர்செய்யப்பட்டு புதிய பட்டியல் வெளியிடப்படவுள்ளது.

ஆசிரியர் சங்கங்களை உள்ளடக்கிய மேன்முறையீட்டுச் சபையூடாக மேன்முறையீட்டுச் செயற்பாடுகள் முழுமையாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், சேவையின் தேவை கருதிய திருத்தப்பட்ட புதிய பட்டியலும் (ஆசிரியர் சங்கங்களைத் தவிர்த்து) தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, சேவையின் தேவை கருதிய திருத்தப்பட்ட இடமாற்றப் பட்டியல் இன்று (24), நாளை (25) மற்றும் 27ஆம் திகதி என மூன்று கட்டங்களாக இணையத்தளத்தில் வெளியிடப்படவுள்ளது.

அத்துடன், சேவையின் தேவை கருதிய ஆசிரியர் இடமாற்றக் கடிதங்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதியும், வருடாந்த இடமாற்றத்துக்கு விண்ணப்பித்துத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் மார்ச் மாதம் 15ஆம் திகதியும் வழங்கி வைக்கப்படும் என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வை.ஜெயசந்திரன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 2026ஆம் ஆண்டுக்கான இடமாற்றக் கோரிக்கைகளில், இடமாற்றச் சபையினூடாக 227 விண்ணப்பங்களும், மேன்முறையீட்டுச் சபையினூடாக 90 விண்ணப்பங்களும், காத்திருப்போர் பட்டியலூடாக 51 விண்ணப்பங்களுமாக மொத்தமாக 368 ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், சேவையின் தேவை கருதி வழங்கப்படும் இடமாற்றம் தொடர்பில் அதிருப்தியடையும் ஆசிரியர்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் கோவையின் XXஆம் அத்தியாயத்துக்கமைய அந்தத் தீர்மானத்துக்கு எதிராக அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

# மோட்டார் சைக்கிள் கவிழ்ந்து காருடன் மோதியதில் இளைஞர் ஒருவர் மரணம்!

காலி - ஹினிதும பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தவலம - அக்குரஸ்ஸ வீதியில் இடம்பெற்ற கோர விபத்தில் சிக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை, அக்குரஸ்ஸ நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, தவலம சந்தி பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியில் கவிழ்ந்துள்ளது. அதேவேளை, எதிர்த்திசையில் வந்த காருடன் குறித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநரும், பின்னால் அமர்ந்து பயணித்த மற்றொருவரும் பலத்த காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக ஹினிதும வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக உடுகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். எனினும், அங்கு சிகிச்சைப் பலனின்றி மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் காலி - தலங்கல்ல பகுதியைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். காயமடைந்த மற்றைய நபர் மேலதிக சிகிச்சைகளுக்காகக் காலி கராபிட்டிய போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த விபத்துடன் தொடர்புடைய காரின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை ஹினிதும பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.





# நிதி கிடைக்கிறது! ஆளணி போதாது!!

## வெற்றிடங்களை நிரப்ப வடக்கு ஆளுநர் பணிப்புரை

வடக்கு மாகாணத்துக்கு நடப்பு ஆண்டில் பல்வேறு மூலங்களிலிருந்தும் பெருமளவிலான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறவுள்ள நிலையில், அவற்றினூடான மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டங்களை வினைத்திறனாக முன்னெடுப்பதற்குத் தேவையான மனித வளத் தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பது தொடர்பில் ஆராயும் விசேட உயர்மட்டக் கலந்துரையாடல், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் தலைமையில் நேற்று திங்கட்கிழமை மாலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை நிதி, டித்வா பேரிடர் மீள்கட்டுமான நிதி, மாவட்டச் செயலகங்கள் மற்றும் மத்திய அமைச்சுக்களின் ஊடான நிதி ஒதுக்கீடுகள், வெளிநாட்டு நிதியுதவிகள் எனப் பல்வேறு மூலங்களிலிருந்தும் வடக்கின் அபிவிருத்திப் பணிகளுக்காக நிதி கிடைக்கப்பெறவுள்ளமை தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

வழமையான ஒதுக்கீடுகளைத் தாண்டி கிடைக்கப்பெறவுள்ள இந்த மிகப் பெரிய நிதியைக் கொண்டு திட்டங்களை முன்னெடுக்கும்போது, மாகாணத் திணைக்களங்களில் ஏற்கனவே நிலவும் ஆளணிப் பற்றாக்குறையானது பெரும் சவாலாக அமையும் என அவர் சுட்டிக்காட்டினார். எனவே, இந்த நிலைமையைச் சீர்செய்து, குறிப்பாகப் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களின் வெற்றிடங்களை நிரப்பி, செயற்றிட்டங்களை எவ்வாறு தடையின்றி முன்னெடுப்பது என்பது குறித்து உடனடியாக ஆராயப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, மனிதவள மற்றும் தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வது தொடர்பான பல்வேறு ஆக்கபூர்வமான யோசனைகளை வடக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல்) பொறியியலாளர் ந.சுதாகரன் முன்வைத்தார்.

வெற்றிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புதல், மாகாணத் திணைக்களங்களுக்கிடையில் தேவைக்கமைவாக உத்தியோகத்தர்களைப் பரிமாறுதல் மற்றும் பயிலுனர்களை உள்ளீர்த்தல் போன்ற மாற்று வழிகளை அவர் பரிந்துரைத்தார். அத்துடன், தற்போதுள்ள அனுமதிக்கப்பட்ட ஆளணியை முழுமையாக நிரப்பினாலும்கூட, எதிர்வரும் மிகப்பெரிய செயற்றிட்டங்களுக்கு அது போதுமானதாக அமையாது எனவும், தரமான வேலைத்திட்டங்களைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நிறைவு செய்வதற்கு மேலதிக தொழில்நுட்ப ஆளணியை உள்ளீர்க்க வேண்டியது காலத்தின் கட்டாயம் எனவும் அவர் தெளிவுபடுத்தினார்.

பிரதிப் பிரதம செயலாளரால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை விரிவாக ஆராய்ந்த ஆளுநர், அவற்றுக்கு அமைவாகத் துரித நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். மேலும், புதிதாக இணைக்கப்படுபவர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டதுடன், ஆளணி நிரப்பல் செயற்பாடுகளை உடனடியாகப் பூர்த்தி செய்து அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக ஆரம்பிக்குமாறும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

இந்த விசேட கலந்துரையாடலில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாணத் திணைக்களப் பணிப்பாளர்கள் மற்றும் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் உள்ளிட்ட பல உயர்மட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.











# சிம்பாப்வேக்கு எதிரான ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி அபார வெற்றி

10ஆவது ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று இரவு மும்பையில் நடைபெற்ற ஆட்டத்தில் சிம்பாப்வே- மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணி பந்து வீச்சைத் தெரிவு செய்தது.

அதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தொடக்க வீரர்களாக கிங் மற்றும் சாய் ஹோப் களமிறங்கினர்.

கிங் 9 ஓட்டங்களுடனும் ஹோப் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். தொடர்ந்து வந்த சிம்ரன் ஹெட்மயர் மற்றும் பவல் ஜோடி சேர்ந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது.

அதிரடியாக விளையாடிய ஹெட்மயர் 19 பந்துகளில் அரைச் சதம் விளாசி அசத்தினார். தொடர்ந்து விளையாடிய அவர் 34 பந்துகளில் 85 (7 பௌண்டரிகள், 7 சிக்ஸர்கள் ஓட்டங்களைக் குவித்து ஆட்ட மிழந்தார்.

தொடர்ந்து பவல் 35 பந்துகளில் 59 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்ட மிழந்தார்.

இறுதியில் ரதர்போர்ட் மற்றும் ஷெப்பர்ட் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஷெப்பர்ட் 10 பந்துகளில் 21 ஓட்டங்களைச் சேர்த்து வெளியேறினார். கடைசி வரை ஆடிய ரதர்போர்ட் 31 ஓட்டங்கள் சேர்த்தார்.

20 ஓவர்கள் முடிவில் மேற்கிந் தியத் தீவுகள் அணி 254 ஓட்டங் களைக் குவித்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியினர் மொத்தமாக 19 சிக்ஸர்களைப் பறக்க விட்டனர்.

பின்னர் 255 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய சிம்பாப்வே அணி, மருமணி (14), பிறையன் பன்னெட் (5) ரியான் பர்ல் (0) ஆகியோரை விரைவாக இழந்தது. இதனால், மூன்றாவது ஓவரில் 20 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுகளைப் பறிகொடுத்துத் தடுமாறியது.

பின்னர் வந்த வீரர்களில் டியோன் மிரேஸ் (28), சிகண்டர் ராசா (27), ரொனி (14) ஆகியோர் ஓரளவு ஆடிச் செல்ல, கடைசிக் கட்டத்தில் பிராட் எவென்ஸ் வாணவேடிக்கை காட்டினார். அவர் 21 பந்துகளில் 43 ஓட்டங்களை அடித்துச் செல்ல, சிம்பாப்வே அணி, 17.4 ஓவர்களில் 147 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதனடிப்படையில் மேற்கிந்தி யத் தீவுகள் அணி 107 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சில் மோட்டி 4 விக்கெட்டுகளையும் அகேல் ஹுசைன் 3 விக்கெட்டு களையும் மத்யூ போட் 2 விக்கெட்டு களையும், ஹொல்டர் ஒரு விக்கெட் டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் ஹெட்மயர் தெரிவானார்.

இந்தப் போட்டியில் வென்றதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி, குழு - 1இன் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

## ரி-20 உலகக் கிண்ணம்: 'சுப்பர்-8'

### குழு 01 - புள்ளிப்பட்டியல்

| அணிகள் | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|
| மே.இ.தீ. | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 5.350 |
| தெ.ஆ. | 1 | 1 | 0 | 0 | 0 | 2 | 3.800 |
| இந்தியா | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -3.800 |
| சிம்பாப்வே. | 1 | 0 | 1 | 0 | 0 | 0 | -5.350 |

## ரி-20 உலகக் கிண்ணம் 'சுப்பர்-8': இன்றைய போட்டி

குழு-02

இங்கிலாந்து எதிர் பாகிஸ்தான்

செவ்வாய் 24 பெப் 7 இரவு

பல்லேகல இலங்கை







# அதிகூடிய ஓட்டங்கள்

சிம்பாப்வே அணிக்கு எதிரான நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 254 ஓட்டங்களைக் குவித்தமை நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் அதிகூடிய ஓட்டங்களாகும்.

அதேவேளை, ரி-20 உலகக் கிண்ண வரலாற்றில் இரண்டாவது அதிகூடிய ஓட்டங்களாகும். முதலிடத்தில் இலங்கை அணி உள்ளது. 2007ஆம் ஆண்டு கென்யாவுக்கு எதிராக 260 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

| அணி | ஓட்டம் | எதிரணி | ஆண்டு |
|---|---|---|---|
| இலங்கை | 260/6 | கென்யா | 2007 |
| மே.இ.தீவுகள் | 254/6 | சிம்பாப்வே | 2026 |
| அயர்லாந்து | 235/5 | ஓமான் | 2026 |
| இங்கிலாந்து | 230/8 | தெ.ஆபிரிக்கா | 2016 |
| இலங்கை | 225/5 | ஓமான் | 2026 |



ஹெட்மயர்

| ஓட்டங்கள் | பந்துகள் | சிக்ஸர்கள் | பௌண்டரிகள் |
|---|---|---|---|
| 85 | 34 | 07 | 07 |

# அதிரடி அரைச்சதம்

அதிரடியாக விளையாடிய ஹெட்மயர் 19 பந்துகளில் அரைச்சதம் விளாசியதன் மூலம் ரி-20 உலகக் கிண்ண வரலாற்றில் குறைந்த பந்துகளில் அரைச் சதம் விளாசிய மேற்கிந்தியத் தீவுகள் வீரரான கிறிஸ் கெயிலின் சாதனையை முறியடித்துள்ளார்.

கிறிஸ் கெயில் 20 பந்துகளில் அரைச்சதம் அடித்திருந்த நிலையில், நேற்று சிம்பாப்வே அணிக்கு எதிராக ஹெட்மயர் 19 பந்துகளில் அரைச்சதம் அடித்து சாதனை படைத்துள்ளார்.

குறைந்த பந்துகளில் அரைச் சதம் விளாசிய வீரர்களில் ஒட்டுமொத்தமாக 10ஆவது வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

| வீரர் | பந்துகள் | எதிரணி | ஆண்டு |
|---|---|---|---|
| யுவராஜ் சிங் | 12 | இங்கிலாந்து | 2007 |
| ஸ்டீபன் | 17 | அயர்லாந்து | 2014 |
| ஸ்டோய்னிஸ் | 17 | இலங்கை | 2022 |
| மேக்ஸ்வெல் | 18 | பாகிஸ்தான் | 2014 |
| கேஎல் ராகுல் | 18 | ஸ்காட்லாந்து | 2021 |
| ஷோயப் மாலிக் | 8 | ஸ்காட்லாந்து | 2021 |
| தசுன் ஷானக | 19 | ஓமன் | 2026 |
| மார்க்ராம் | 19 | நியூசிலாந்து | 2026 |
| ரோஹித் சர்மா | 19 | ஆஸ்திரேலியா | 2024 |
| ஹெட்மயர் | 19 | சிம்பாப்வே | 2026 |
| கிறிஸ் கெய்ல் | 20 | தெ.ஆபிரிக்கா | 2007 |



# புத்தளம் ரத்மல்யாயவில் ஓட்டோ சாரதியின் படுகொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

புத்தளம் பகுதியில் ஓட்டோ சாரதி ஒருவரைக் கடத்தி கொலை செய்து, அந்த ஓட்டோவைக் கொள்ளையிட்ட சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் நேற்று திங்கட்கிழமை புத்தளம் ரத்மல்யாய பகுதியில் கண்டண ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக் கப்பட்டது.

கைது செய்யப்பட்டுள்ள கொலைக் குற்றவாளி போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் எனவும், இந்த ஈவு இரக்கம் அற்ற செயலை வன்மையாகக் கண்டிக்கின்றனர் எனவும் அந்த நபருக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் ஆர்ப் பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

இச்சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.
















# புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் தொழில்முயற்சியாளர்களுக்கு அழைப்பு

(பா.சதீசன்)

'தொழில் முயற்சியாளர்கள் புதுக்குடியிருப்பிற்கு வாருங்கள். உங்களுக்கான இடம் காத்திருக்கிறது' – என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் இராசரட்ணம் விஜயகுமார் தெரிவித்தார்.

நேற்றையதினம் மாலை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

'வளமான நாடு, வளமான வாழ்க்கை' என்ற அரச கொள்கையின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நீண்டகாலமாக நிலவி வந்த காணிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் 2012ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் விசுவமடு பகுதியில் 24 நபர்களுக்கு காணி வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் புதிய காணிகளை வழங்கும் காணிக்கச்சேரி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக 100 நபர்களுக்கு காணி வழங்கும் காணிக்கச்சேரி எதிர்வரும் மார்ச் 4ஆம் திகதி நடைபெற உள்ளது. இது மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் புதிய காணி வழங்கலில் முக்கியமான மைல்கல்லாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதேசத்தில் காணி இல்லாதவர்களுக்கு வீடு கட்டுவதற்கான காணிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், பயிர்செய்கைக்கான காணி இல்லாதவர்களின் விவரங்களும் சேகரிக்கப்பட்டு வருவதாகவும், அதிக



எவு காணிகளை பிடித்தவர்களை வெளியேற்றி, உண்மையில் காணி தேவையுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளித்து, அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும், பிரதேசத்தில் வேலையின்மையை குறைத்து ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கில் மூன்று வகையான விசேட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

முதலாவது குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்காக விசேட தொழில் வலயங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தேராவில் பகுதியில் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 10க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முதலீட்டாளர்களுக்கு, அவர்களின் முதலீட்டளவிற்கு ஏற்ப ஒரே இடத்தில் காணிகள் வழங்கப்படும். இப்பகுதியில் அடிப்படை வசதிகள் உள்ளன எனவும், அருகில் உணவகம் மற்றும் தேராவில் குளம் அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இரண்டாவது பாரிய தொழில் முயற்சிகளை மேற்கொள்ள விரும்புவோருக்காக ஏ35 வீதிக்கு அண்மித்த மூன்று இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. புதுக்குடியிருப்பு சந்திக்கு அருகிலுள்ள ஒட்டுசுட்டான் வீதி பகுதி, தேராவில்லுக்கு அண்மித்த பகுதி மற்றும் கோம்பாவில் பகுதி ஆகிய இடங்களில் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. தகுந்த திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் முதலீட்டாளர்களுக்கு காணிகள் வழங்கப்படும்.

மூன்றாவது, பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் 50 லீற்றருக்கு மேற்பட்ட பாலை உற்பத்தி செய்பவர்களுக்கு, கால்நடை வைத்தியரின் பரிந்துரையின் அடிப்படையில் புல்வளர்ப்பதற்காக இரண்டு ஏக்கர் வரை காணி வழங்கப்படும். அதிக உற்பத்தி செய்பவர்களுக்கு தேவைக்கேற்ப கூடுதல் காணிகளும் வழங்கப்படும் எனவும் கூறினார். தற்போது ஐந்து பேருக்கு இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

தேராவில் பகுதியில் உள்ள அரச பண்ணையில் காணப்படும் மாமரங்களை பயன்படுத்தி தொழில் முயற்சிகள் மேற்கொள்ள முன்வருமாறு தொழில் முனைவோர்களிடம் அவர் அழைப்பு விடுத்தார்.

புதுக்குடியிருப்பில் தொழில் வாய்ப்புகள் அதிகம் உள்ளன எனவும், பாரியளவிலான காணிகளை விவசாயப் பண்ணைகளுக்காக வழங்காமல், பல்துறை தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் வகையில் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

எனவே தொழில்முனைவோர் புதுக்குடியிருப்பிற்கு வந்து முதலீடு செய்து வேலைவாய்ப்புகளை உருவாக்குமாறும், காணி இல்லாதவர்கள் விண்ணப்பித்து அரச கொள்கைக்கேற்ப பயன் பெறுமாறும் பிரதேச செயலாளர் கேட்டுக் கொண்டார்.

# நாகர்கோவில் வடக்கில் கஞ்சாவுடன் ஒருவர் கைது



(பூ.லின்ரன்)

நாகர்கோவில் வடக்கில் கேரள கஞ்சாவுடன் நெல்லியடி விசேட அதிரடிப் படையினரால் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்றுஜ் காலை நாகர்கோவில் வடக்கு பகுதியில் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது

இதன் போது 1 கிலோ 750 கிராம் கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை கஞ்சாவுடன் மருதங்கேணி பொலிசாரிடம் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் இந்த நபரை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக நீதிமன்றத்தில் பொலிஸார் முற்படுத்தவுள்ளனர்




# கொக்குத்தொடுவாயில் தமிழரின் காணிகளை ஊடறுத்து சிங்களவர்களின் வயல்களைக் காப்பாற்ற யானை வேலி!

## முல்லை. அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்த ரவிகரன் எம்.பி.

(பா.சதீசன்)

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் கமநல சேவைநிலையப் பிரிவிற்குட்பட்ட தமிழ் மக்களின் நெற்செய்கைக் காணிகளை ஊடறுத்து மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினால் யானைவேலி அமைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையுடன், கோட்டைக்கேணி பகுதியில் தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்களை ஆக்கிரமித்து உப்பளம் ஒன்றை அமைப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனக் கொக்குத்தொடுவாய் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகளால் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறையீடு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்குத் தெரியப்படுத்தியமையுடன், இந்த விடயங்கள் தொடர்பில் கவனஞ் செலுத்துமாறும் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், கொக்குத்தொடுவாய் கமநலசேவை நிலையப் பிரிவிலுள்ள கூமாவடிக் கண்டல், நாயடிச்சமுறிப்பு, கன்னாட்டி, அக்கரைவெளி உள்ளிட்ட தமிழர்களின் பூர்வீக விவசாய நிலங்களை ஊடறுத்து மகாவலி அபிவிருத்தி அதிகார சபையினால் யானைவேலி அமைப்புக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என் கொக்குத்தொடுவாய் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகளால் ரவிகரனின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

குறிப்பாக தமிழ் மக்களின் பூர்வீக வயல் நிலங்களை ஆக்கிரமித்து விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் பெரும்பான்மை இனத்தவர்கள் காட்டுயானைகளிடமிருந்து பாதுகாப்பைப் பெறுவதற்காக தமிழ் மக்கள் தற்போது நெற்செய்கையில் ஈடுபட்டுவரும் வயல் நிலங்களின் குறுக்காக இவ்வாறு யானைவேலிகள் அமைக்கும்





செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என முறையிடப்பட்டது.

அத்தோடு தமிழ் மக்கள் தற்போது நெற்செய்கையில் ஈடுபட்டுவரும் வயல்காணிகளையும் ஆக்கிரமிப்புச் செய்வதற்கான ஒரு உத்தியாகவே இவ்வாறு தமது வயல் காணிகளின் குறுக்காக மகாவலி அதிகாரசபை யானைவேலி அமைக்கும் செயற்பாட்டை அவர்கள் முன்னெடுத்துள்ளனர் எனவும் கொக்குத்தொடுவாய் கமக்கார அமைப்பு பிரதிநிதிகளால் குற்றச்சாட்டொன்றும் முன்வைக்கப்பட்டிருந்தது.

அதேவேளை கொக்குத்தொடுவாய் மத்தி கிராம அலுவலர் பிரிவிலுள்ள கோட்டைக்கேணி பகுதியிலுள்ள தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்களை ஆக்கிரமிப்புச்செய்து உப்பளம் அமைப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகையசூழலில் நேற்று கொக்குத்தொடுவாய் கமக்காரஅமைப்பு பிரதிநிதிகளுடன் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்குசென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டசெயலாளர் அ.உமாமகேஸ்வரனின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இந்தப் பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் நாடாளுமன்ற உறுப்பினரால் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில் இந்த விடயங்கள் தொடர்பில் கமக்கார அமைப்பினால் தமக்கு கோரிக்கை கடிதம் கையளிக்குமாறு கேட்டுக்கொண்ட முல்லைத்தீவு மாவட்டசெயலாளர், இவ்விடயங்கள் தொடர்பில் தம்மால் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

# கால்நடைப் பாதிப்புகளுக்கான இழப்பீடு நேற்றுத் திருகோணமலையில் வழங்கல்

(எஸ்.கீதபொன்கலன்)

டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்களுக்கான இழப்பீட்டு நிவாரணத் தொகைக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு,நேற்று மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர கால்நடை வளர்ப்பாளர்களுக்கான காசோலைகளை வழங்கி வைத்தார்.

இதன்படி திருகோணமலை மாவட்ட கால்நடைத் துறைக்கு இழப்பீட்டு நிவாரணத் தொகையாக ரூபா 558 மில்லியன் வழங்கப்படவுள்ளது. இத் தொகையானது 1279 பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

நேற்றைய நிகழ்வின் போது மொரவெவ,கந்தளாய், திருகோணமலை பட்டினமும் சூழலும், பதவிஸ்ரீபுர, தம்பலகாமம் மற்றும் கிண்ணியா ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 281 பயனாளிகளுக்கு ரூ. 232 மில்லியன் கொடுப்பனவிற்கான காசோலைகள் வழங்கிவைக்கப்பட்டன.

ஜனவரி 30 ஆம் தேதி முதல் கட்டமாக மூதூர் மற்றும் சேருநுவர பிரதேச செயலகப்பிரிவுகளைச் சேர்ந்த 275 பயனாளிகளுக்கு நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது.

மேலும் மூன்றாம் கட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் குச்சவெளி மற்றும் ஈச்சலம்பற்று பிரதேச செயலகப் பிரிவுகளில் பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவுள்ளது.

காசோலை வழங்கும் நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தித்துறை அமைச்சின் செயலாளர் முகமது அஸ்மி, மாகாண கால்நடை உற்பத்தித் துறையின் மாகாண பணிப்பாளர் மருத்துவர் முகமது சுல்பிகார் ஆகியோர் கலந்து கொண்டனர்.












# வவுனியாவில் பல்பொருள் அங்காடிக்குள் பெண்ணின் மீது பெண்ணே கத்திக்குத்து!

(கி.வசந்தன்)

வவுனியா – பண்டாரிக்குளம் பகுதியில் பல்பொருள் அங்காடி ஒன்றுக்குள் புகுந்து பெண் ஒருவர் மீது கத்தி குத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடரபில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸெ தெரிவித்தனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் முனியப்பர் கோயில் வீதியில் உள்ள அடுக்குமாடி வளவுக்குள் அமைந்துள்ள பல்பொருள் அங்காடி ஒன்றில் நேற்று இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கத்தி குத்துச் சம்பவம் தொடர்பில் கடை உரிமையாளர், வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவில் செய்த முறைப்பாட்டுக்கமைய, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ.எஸ்.வீரரத்தினவின் வழிகாட்டலில், வவுனியா பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி இலங்கசிங்க தலைமையில், பொலிஸ் சார்ஜண்டுகளான திஸாநாயக்க (37348), ரேவத (40878), பொலிஸ் கான்ஸ்டபிளான நவகீதன் (8098) உள்ளடங்கிய பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு துரிதமாகச் செயல்பட்டு கத்தி குத்தை மேற்கொண்ட பெண்ணை உடனடியாகக் கைது செய்தனர்.

கூமாங்குளம் பகுதியில் வசிக்கும் 50 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அடிப்படையில் தெரிய வந்தவை வருமாறு:–

அடுக்குமாடிக் குடியிருப்பில் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இந்தப் பெண் துப்பரவு வேலை செய்து வந்ததார் அங்கு வாடகை அடிப்படையில் தங்கியிருந்த 64 வயதுடைய பெண் ஒருவருக்கும் அங்கு துப்பரவுப் பணி வேலை செய்து வரும் சந்தேக நபருக்கும் இடையில் கடந்த சில நாள்களாக ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக சந்தேக நபரை அடுக்குமாடிக் குடியிருப்பின் உரிமையாளர் வேலையில் இருந்து நிறுத்தியுள்ளார்.

இவ் முரண்பாடு காரணமாகவே வேலையால் நிறுத்தப்பட்ட பெண்ணால் இந்தக் கத்திக் குத்து மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கத்திக் குத்துக்கு இலக்கான பெண் ஆபத்தான நிலையில் வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், கைது செய்யப்பட்ட பெண்ணை நீதிமன்றில் தாங்கள் முற்படுத்தவுள்ளனர் எனொ பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.










# இலங்கையின் ஜனவரி மாதத்தின் பணவீக்கம் 2.4 சதவீதமாக வீழ்ச்சி

இலங்கையின் முதன்மை பணவீக்க விகிதமானது கடந்த ஜனவரி மாதத்தில் 2.4 சதவீதமாகக் குறைந்துள்ளதாகத் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட இந்தப் பணவீக்கமானது, கடந்த 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 2.9 சதவீதமாகக் காணப்பட்ட நிலையில், தற்போது 0.5 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

குறிப்பாக, உணவுப் பொருள்களின் விலையேற்றத்தைக் குறிக்கும் உணவுப் பணவீக்கமானது டிசம்பர் மாதத்தில் காணப்பட்ட 4.4 சதவீதத்திலிருந்து ஜனவரி மாதத்தில் 3.4 சதவீதமாகக் கணிசமாகக் குறைந்துள்ளது.

அதேவேளை, உணவு அல்லாத வகைப்பாட்டிலான பணவீக்கமானது எவ்வித மாற்றமுமின்றி 1.6 சதவீதத்திலேயே நீடிக்கின்றது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பின் வேகம் கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜனவரி மாதத்தில் ஓரளவுக்குக் குறைந்துள்ளதை இந்தப் புள்ளிவிபரங்கள் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

# ‘மீனகயா’ கடுகதி ரயில் சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பம்

“மீனகயா” இரவுநேர கடுகதி ரயில் நேற்று திங்கள் கிழமை மாலை 7.00 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்புக்கான சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது என ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

https://seatreservation.railway.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக ஆசனங்களை முன்பதிவு செய்ய முடியும் என்பதுடன், ரயில் நிலையங்களுக்கு நேரில் சென்றும் இந்த ரயிலுக்கான ஆசனங்களை முன்பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**ரயில் அட்டவணை பின்வருமாறு:**

கொழும்பு கோட்டை: மாலை 7:00 மணி
கம்பஹா: மாலை 7:33 மணி
பொல்கஹவெல: இரவு 8:24 மணி
குருணாகல்: இரவு 8:49 மணி
கிரேட்: இரவு 10:13 மணி
வெலிக்கடை: இரவு 10:47 மணி
மொரகொல்லாகம: இரவு 11:13 மணி
ஆர்ட் லேக்: இரவு 11:25 மணி
கல் ஓயா: காலை 1:17 மணி
ஹிங்குராக்கொட: காலை 1:48 மணி
மனம்பிட்டிய: காலை 2:30 மணி
வெலிக்கடை: காலை 3:04 மணி
புனானை : காலை 3:33 மணி
வாழைச்சேனை: காலை 4:02 மணி
ஏறாவூர்: காலை 4:32 மணி
மட்டக்களப்பு: காலை 4:51 மணி




**மட்டக்களப்பு:கொழும்பு கோட்டை (ரயில் எண். 6080)**

மட்டக்களப்பு: இரவு 8:00 மணி
ஏறாவூர்: இரவு 8:21 மணி
வாழைச்சேனை: மாலை 8:51 மணி
புனானை: இரவு 9:20 மணி
மனம்பிட்டிய: இரவு 10:02 மணி
பொலன்னறுவை: இரவு 10:28 மணி
கல் ஓயா: இரவு 11:48 மணி
ஆர்ட் லேக்: காலை 1:08 மணி
குருணாகலை: காலை 3:36 மணி
பொல்கஹவெல: காலை 4:01 மணி
கம்பஹா: காலை 4:55 மணி
மருதானை: காலை 5:26 மணி
கொழும்பு கோட்டை: காலை 5:31 மணி

**(இன்னொரு செய்தி 24ஆம் பக்கத்தில்...)**






# குமண தேசிய பூங்காவிற்குள் வேட்டையாடினராம் 6 பேர் ஆமை முட்டை, மான் இறைச்சியுடன் கைது



**(பாறுக் ஷிஹான்)**

குமண தேசிய பூங்காவிற்குள் அத்து மீறி நுழைந்து வனவிலங்குகளை வேட்டையாடி அவற்றின் இறைச்சியைப் படகு மூலம் கடத்திச் சென்றவர்கள் என்று கூறப்படுல் ஆறு பேரை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

அறுகம்பே விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட தொடர் சுற்றிவளைப்புகளின் போதே இந்தச் சந்தேகநபர்கள் பிடிபட்டுள்ளனர்.

அதிரடிப்படையினரின் கடந்த சில தினங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சோதனையின் போது இரண்டு வெவ்வேறு இடங்களில் சட்டவிரோதப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன.

இதன் போது கடற்கரைப் பகுதியில் வைத்து இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். 57 கடலாமை முட்டைகள் அவர்கள் வசம் இருந்து மீட்கப்பட்டன. வனவிலங்கு இறைச்சிகள் ஒரு தொகை மற்றுமொரு சோதனையில் மீட்கப்பட்டன. இதில் 17 கிலோ கிராம் மான் இறைச்சி, 56 கிலோ காட்டு எருமை இறைச்சி மற்றும் 16 கிலோ மான் மற்றும் எருமையின் ஈரல் என்பன உள்ளடங்குகின்றன.

மேலும் கடல் வழியாக இந்த இறைச்சிகளைக் கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஒரு பைபர் படகு, 25 குதிரைத்திறன் கொண்ட வெளியில் பொருத்தும் இயந்திரம் மற்றும் இரண்டு எரிபொருள் கொள்கலன்கள் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மேலும் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.கைது செய்யப்பட்ட ஆறு சந்தேகநபர்களும், கைப்பற்றப்பட்ட இறைச்சி மற்றும் ஏனைய பொருள்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக லாகுகலை வனஜீவராசிகள் அலுவலகத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.












# மூதூர் பிரதேச செயலகத்துக்கு முன் கவனவீர்ப்பு

(எம்.எம்.நௌபீக்)

அண்மையில் ஏற்பட்ட டித்வா சூறா வளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமையல் உபகரணங்களை பெற்றுக் கொள்ள வழங்கப்பட வேண்டிய 50, 000 ரூபா கொடுப்பனவைப் பெற மேலும் பலர் தகுதியுடையவராக காணப்படுகின்ற போதிலும் குறிப்பிட்ட சிலருக்கே இந்த கொடுப்பனவு கிடைத் துள்ளது எனத் தெரிவித்து பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் அந்த கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நேற்றைய தினம் இரண்டாவது தடவையாகவும் மூதூர் பிரதேச செயலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது பொது மக்களின் கையெழுத்துடன் மகஜர் ஒன்றும் பிர தேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளது.

இதன்போது கருத்து தெரிவித்த பாதிக்கப்பட்ட மக்கள், ஜனாதிபதி வழங் கச் சொன்ன வெள்ள நிவாரணக் கொடுப்பனவை தடுப்பவர்கள் அதிகாரி களா? அல்லது அந்த அதிகாரிகளுக்கு தடங்கலாக இருப்பவர்கள் யார்? என் பதை மக்களுக்கு பகிரங்கமாக வெளிப் படுத்துமாறும் கேட்டுக் கொண்ட னர்.










# 200 அடிப் பள்ளத்தில் கவிழ்ந்த ஓட்டோ நால்வர் நுவரெலியா வைத்தியசாலையில்

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

சுமார் 200 அடி பள்ளத்தில் ஓட்டோ ஒன்று கவிழ்ந்ததில் அதில் பயணித்த நான்கு பேர் படுகாயமடைந்தனர்.

அவர்கள் நுவரெலியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என டயகம பொலிஸர் தெரிவித்தனர்.

இச் சம்பவம் நேற்று நேற்று முன்தினம் இரவு டயகம நகரத்தில் இருந்து வெஸ்ட் டயகம நட்போன் தோட்டத்திற்கு செல்லும் பிரதான வீதியில் இடம் பெற்று உள்ளது.

இவ் விபத்து குறித்து டயகம பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆடம்பர சுற்றுலா சொகுசு பயணிகள் கப்பல் நேற்றுத் திருகோணமலையை வந்தடைந்தது

**(எஸ்.கீதபொன்கலன்)**

பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் 555 சுற்றுலாப் பயணிகளை ஏற்றி வந்த "எம்.வி. கிரிஸ்டல் சிம்பரி" என்ற ஆடம்பர சுற்றுலா சொகுசு பயணிகள் கப்பல் நேற்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் திருகோணமலை அஷ்ரப் இறங்குதுறையை வந்தடைந்தது.




இந்தக் கப்பலில் ஆஸ்திரேலியா, இந்தியா, அமெரிக்கா போன்ற பல நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் உள்ளனர்.

திருகோணமலைக்கு வருகை தந்துள்ள இவர்கள் திருகோணமலை, சிகிரியா, ஹபரணை ஆகிய பிரதேசங்களில்உள்ளசுற்றுலாத்தலங்களைப் பார்வையிடத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



பஹாமாஸில் பதிவுசெய்யப்பட்ட இந்தக் கப்பலில் 497 பேர் கொண்ட பணியாளர் குழுவினர் உள்ளனர். இக்கப்பல் ஒரு நாள் திருகோணமலையில் தரித்து நிற்க உள்ளது.

கிழக்கு மாகாணத்தின் சுற்றுலா மையமான திருகோணமலைக்கு இந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை, மாகாணத்தின் சுற்றுலாத் துறைக்கு பெரும் ஊக்கமாக அமையும் என சுற்றுலாத் துறைசார் பிரிவினர் எதிர்பார்க்கின்றனர்ஞ



# நோட்டனில் வீதியை விட்டு விலகி 150 அடி பள்ளத்தில் கவிழ்ந்த கார்

## அதில் இருந்த மூவருக்குக் காயம்

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

சிவனடி பாத மலைக்கு வந்து மீண்டும் வீடு திரும்பிய கார் ஒன்று வீதியை விட்டு விலகி 150 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது. அதில் மூவர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு நோட்டன் லக்சபான பகுதியில் இடம் பெற்று உள்ளது என நோட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

சிவனடி பாத மலைக்கு வந்து தரிசனம் செய்த பின்னர் மீண்டும் காலி பகுதியில் தங்களது வீட்டிற்கு திரும்பிய வேளையில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. காரில் சென்ற நான்கு பேரில் மூவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் லக்சபான கிராமிய வைத்திய சாலையில் சேர்க்கபட்டனர். பின்னர் அவர்களில் இரண்டு பேர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி ஆதார வைத்திய சாலைக்கு மாற்றம் செய்யபட்டு உள்ளனர். சாரதிக்கு நித்திரை ஏற்பட்டதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்பது முதற் கட்ட விசாரணையில் தெரியவந் துள்ளது.

விபத்து குறித்து நோட்டன் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.







# சட்டவிரோதமாகச் சுழியோடி கடல் அட்டை பிடிப்பதில் ஈடுபட்ட பத்துப் பேர் இரணைதீவுக் கடற்பரப்பில் கைது


**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

இலங்கை கடற்படையினர், கிளிநொச்சியின் இரணைதீவு மேற்கு கடல் பகுதியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் மூலம், சட்டவிரோதமாக இரவு நேரத்தில் சுழியோடி, கடல் அட்டை பிடியில் ஈடுபட்ட பத்து நபர்களை 1,232 கடல் அட்டைகள், மூன்று டிங்கிப் படகுகள் மற்றும் சுழியோடி உபகரணங்களுடன் மடக்கினர்.

கிளிநொச்சி, இரணைதீவு மேற்கு கடல் பகுதியில் வட மத்திய கடற்படை கட்டளையின் இலங்கைக் கடற்படைக் கப்பல் புவனெக நிறுவனம் நடத்திய இந்த சிறப்புத் தேடுதல் நடவடிக்கையின் போது, மூன்று சந்தேகத்திற்கிடமான டிங்கி படகுகள் சோதனை செய்யப்பட்டன. அங்கு சட்டவிரோதமாக இரவு நேர சுழியோடலில் ஈடுபட்ட மேற்படி பத்து நபர்களும் கைது செய்யப்பட்டனர்.



கைது செய்யப்பட்டவர்கள் 29 முதல் 54 வயதுக்குட்பட்ட பள்ளிமுனை மற்றும் மன்னார் பகுதிகளில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட கடல் அட்டைகள், டிங்கி படகுகள் மற்றும் சுழியோடி உபகரணங்கள் போன்றவற்றுடன. கைதானவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி மீன்வள ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.





# அயோத்தி சிவன் கோவிலின் தலைமைப் பூசகர் குழு இன்று கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் நேரில் தரிசனம்

(ந.லோகதயாளன்)

இந்தியாவின் அயோத்தியில் உள்ள சிவன் கோவிலின் தலைமைப் பூசகர் கைஷானந்த் கிரிஜி மகாராஜ் தலைமையிலான 14 பேர் கொண்ட குழு, சிறப்பு விஜயமாக நேற்றுக் காலை இலங்கையை வந்தடைந்தது.

அவர்கள் இலங்கை விஜயத்தின் போது, மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம், யாழ்ப்பாணத்தில் உள்ள நகுலேஸ்வரம், திருகோணமலையில் உள்ள கோணேஸ்வரம், நுவரெலியாவில் உள்ள சீதா அம்மன் கோயில் மற்றும் பொலன்னறுவையில் உள்ள பண்டைய சிவன் கோயில்கள் உட்பட இலங்கையில் உள்ள பஞ்ச ஈச்சரங்கள் உள்ளிட்ட 10 சிவன் கோயில்களை தரிசிக்கத் திட்டமிடப்பட்டுள்ளனர்.

அதன் ஒரு கட்டமாக கைஷானந்த் கிரிஜி மகாராஜ் குழுவினர் இன்று விசேட ஹெலி மூலம் யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் வருகின்றார்.

இவர்களுக்கான பயண ஏற்பாடுகளை சுற்றுலா அதிகார சபை மேற்கொண்டுள்ளது.

மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் வரும் சுவாமி குழுவினரை மாவட்ட அரச அதிபர்கள் வரவேற்று ஆலயத்திற்குக் கூட்டிச் செல்ல ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, இந்த 14 பேர் கொண்ட குழு, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் புதுடில்லியில் இருந்து கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நேற்று வந்தடைந்தது.

சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க, தூதுக்குழுவை விமான நிலையத்தில் வரவேற்றார்.

இந்தக் குழு இலங்கையில் தங்கியிருக்கும் போது வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத்துடன் சிறப்பு கலந்துரையாடலை நடத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# எல்ல - பள்ளகெடடுவவில் சிசு ஒன்றின் சடலம் மீட்பு

(பசறை நிருபர்)

எல்ல – பள்ளகெட்டுவ பகுதியில் உள்ள கலபிட்டகந்த பகுதியில் சிசு ஒன்றின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக பல்லகெடுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்குச் சென்ற அதிகாரிகள், கலபிட்டகந்த பகுதியில் சிசு ஒன்று சடலமாக கிடந்ததை உறுதிப்படுத்தினர்.

சிசுவின் பெற்றோர் யார் என்பதைக் கண்டறியும் நோக்கில் விரிவான விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், சிசுவின் மரணத்திற்கான காரணம் குறித்து மருத்துவ பரிசோதனைகள் மூலம் அறிக்கை பெறப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக தகவல்கள் விசாரணைகள் முன்னேறிய பின்னர் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீனகயா ரயில் சேவை மீள ஆரம்பம்!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

டிட்வா சூறாவளி காரணமாக தடைப்பட்டிருந்த மீனகயா ரயில் சேவை நேற்று முதல் மீள ஆரம்பித்துளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நேற்றிரவு 7 மணிக்கு கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி மீனகயா ரயில் தனது பயணத்தை ஆரம்பித்தது.

அண்மையில் ஏற்பட்ட டிட்வா சூறாவளியால் மட்டக்களப்பு ரயில் மார்க்கம் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது.

இதன் காரணமாக அந்த மார்க்கத்தின் ஊடான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






## கொழும்பு மாநகர சபையின் ஊழல் மோசடிகள்:

# பொதுமக்கள் முறைப்பாடு வழங்குவதற்கான காலக்கெடு மார்ச் 16 ஆம் திகதி வரை நீடிப்பு

2010ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கொழும்பு மாநகர சபையில் இடம்பெற்றதாகக் கருதப்படும் ஊழல் நடவடிக்கைகள், மோசடிகள், நம்பிக்கைப் பொறுப்பின் குற்றவியல் ரீதியான மீறுகை, அதிகாரம் மற்றும் அரச வளங்கள் அல்லது வரப்பிரசாதங்களை முறைகேடாகப் பயன்படுத்துதல் அல்லது துஷ்பிரயோகம் செய்தல் ,சட்டவிரோத ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள், கொள்முதல் வழிகாட்டுதல்களை மீறுதல், அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடுவதில் இடம்பெற்ற முறைகேடுகள், முறையான நடைமுறைகளுக்குப் புறம்பாக முன்னெடுக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள், இணக்கப்பாடுகள் மற்றும் மேற்கூறிய செயல்களால் அரச சொத்துக்கள் அல்லது வருமானத்திற்கு ஏற்பட்ட பாரிய இழப்புகள் மற்றும் சேதங்கள் குறித்துக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிற்கு, பொதுமக்கள் தமது முறைப்பாடுகள் மற்றும் தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு 2026 மார்ச் 16ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான எழுத்துமூலமான முறைப்பாடுகள் அல்லது தகவல்களை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில் செயலாளர், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, 152, காலி வீதி,கொழும்பு 03 எனும் முகவரிக்கு அனுப்ப முடியும்.

சமர்ப்பிக்கப்படும் அனைத்து முறைப்பாடுகளிலும் முறைப்பாட்டாளரின் பெயர், முகவரி, தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கம் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும். எவரேனும் தனது அடையாளத்தை வெளிப்படுத்த விரும்பாவிடின் அது தொடர்பாக ஆணைக்குழுவிடம் கோர முடியும்.

அத்துடன், ஆணைக்குழுவிடம் வாய்மூலமாகத் தகவல்களை வழங்க விரும்பும் நிறுவனங்கள் அல்லது நபர்கள், 011 2 301 735 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம், 2026 மார்ச் மாதம் 16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரான ஒரு திகதியைத் ஒதுக்கிக் கொள்ள முடியும்.

# வாடகை வாகன சேவைகளுக்காக புதிய சட்டவிதிகள் முன்மொழிவு

## விரைவில் வர்த்தமானி வெளியீடு



இலங்கையில் இயங்கி வரும் வாடகை வாகன சேவைகளுக்காக முறையான ஒழுங்குமுறை கட்டமைப்பை நிறுவுவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை அறிவித்துள்ளது.

வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் மஞ்சுள குலரத்ன இது குறித்து கருத்து தெரிவிக்கையில், தற்போது முன்மொழியப்பட்டுள்ள புதிய ஒழுங்குவிதிகள் தொடர்பான வரைவு தயார் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்த புதிய சட்டக்கட்டமைப்பு முக்கியமாக மூன்று இலக்குகளை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

வாடகை வாகன சாரதிகளின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், இத்துறையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்காக முறையான நலன்புரி திட்டங்களை அறிமுகப்படுத்துதல், செயலி வழி இயங்கும் நவீன வாடகை வாகன சேவைகள் மற்றும் பாரம்பரிய வாடகை சேவைகள் ஆகிய இரண்டையும் ஒரே கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டு வருதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

இந்த முன்மொழிவுகளை மேலும் செம்மைப்படுத்துவதற்காக, மாவட்ட ரீதியாக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.









# தென்னாப்பிரிக்காவிலிருந்து இறக்குமதியான 9 ஆவது நிலக்கரி கப்பலும் தரம் குறைந்தது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

தென்னாப்பிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 8 நிலக்கரி கப்பல்களும் தரம் குறைந்தவை என்று சாட்சியங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், 9 ஆவது நிலக்கரி கப்பலும் தரம் குறைந்தது என்று தரவுகளோடு பதிவாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஹோமாகம ஸ்ரீ கல்யாணதர்ம அபினவாராம விகாரையில் போதி மரத்தை சுற்றி அமைக்கப்பட்ட தங்க சுற்று வேலியை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று திங்கள் கிழமை கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மின் உற்பத்தி நிலையத்தின் எரிப்பு பதிவேடுகள் மற்றும் ஒரு மின் அலகு உற்பத்திக்கு கிலோவாட் மணிக்கு தேவையான நிலக்கரியின் கிலோ கிராம் அளவு ஆகியவற்றின்படியும், நுரச்சோலை மின் நிலையம் 900 மெகாவாட் உற்பத்தி செய்கிறது.

என்ற பதிவுகளின்படியும், 300 மெகாவாட் கொண்ட முதல் மற்றும் மூன்றாவது அலகுகளின் தரவுகளின் அடிப்படையிலும் தென்னாப்பிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 9 ஆவது நிலக் கரிக் கப்பலும் தரம் குறைந்தது என்று உறுதியாகியுள்ளது.

முதல் அலகில் 250 மெகாவாட்டும், மூன்றாவது அலகில் 275 மெகாவாட்டும் உற்பத்தியாகியுள்ளது, இது 300 மெகாவாட்டாக அமைந்திருக்க வேண்டும், இரண்டாவது அலகில் மட்டும் சரியாக 300 மெகாவாட் உற்பத்தியாகியுள்ளது, அதற்கு காரணம் அந்த அலகில் ரஷ்யாவிலிருந்து கொண்டு வரப்பட்ட உயர் தர நிலக்கரி பயன்படுத்தப்பட்டது.

இந்த அரசாங்கம் 25 முதல் 27 கப்பல்கள் வரை தென்னாப்பிரிக்காவிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்துள்ளது, ஆனால் இந்த நிலக்கரி தரம் குறைந்தவை என்று சாட்சிய ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது, நிகழ்நேர பதிவுகளின்படி நிலக்கரி மூலம் பாரதூரமான ஊழல் நடைபெற்றுள்ளது .

மகா சங்க ரத்னத்திற்கு “கேடுகெட்டவன்” என்று அவமதிக்கும் இந்த அரசாங்கம், கேடுகெட்டவனையும் தாண்டி நிலக்கரி மூலம் நடத்தும் ஊழல் மற்றும் மோசடியினால் மக்களுக்கு மிகவும் பாரதூரமான பாதிப்பே ஏற்படுகிறது.” என்று தெரிவித்துள்ளார்.











# மத்திய மலைநாட்டில் தொடரும் மழை: மரக்கறி விலைகளில் ஏற்பட்ட தாக்கம்

நிலவும் மழையுடனான வானிலையைத் தொடர்ந்து மத்திய மலைநாட்டில் மரக்கறிகளின் விலையில் ஏற்றத்தாழ்வுகள் பதிவாகியுள்ளன.

இதன்படி, நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோகிராம் கோவா 140 ரூபாய்க்கும், கரட் ஒரு கிலோகிராம் 250 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

லீக்ஸ் ஒரு கிலோகிராம் 190 ரூபாய்க்கும், முள்ளங்கி ஒரு கிலோகிராம் 40 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அத்துடன், ஒரு கிலோ கிராம் பீட்ரூட் 110 ரூபாய்க்கும், குடைமிளகாய் ஒரு கிலோகிராம் 2,000 ரூபாய்க்கும் கறிமிளகாய் ஒரு கிலோகிராம் 450 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# மத்தளயில் உச்சம் தொட்ட வெப்பம்: 33.9 பாகை செல்சியஸ் வெப்பம் பதிவு

இலங்கையில் நேற்று பதிவான வெப்பநிலையின் அடிப்படையில், மத்தள பகுதியில் அதிகூடிய வெப்பநிலை பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் தரவுகளின்படி, நேற்று மத்தள வானிலை ஆய்வு நிலையத்தில் அதிகபட்ச வெப்பநிலையாக 33.9 பாகை செல்சியஸ் பதிவாகியுள்ளது.

நிலவி வரும் வறண்ட மற்றும் வெப்பமான வானிலை காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் சராசரி வெப்பநிலையை விட சற்று உயர்வான நிலை காணப்படுகிறது.

வெப்பநிலை உச்சத்தில் இருக்கும் நண்பகல் மற்றும் மதிய வேளைகளில் பொதுமக்கள் தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

போதுமான அளவு தண்ணீர் குடித்து உடலை நீரேற்றத்துடன் வைத்திருத்தல்.

நேரடி சூரிய ஒளியில் அதிக நேரம் ஈடுபடுவதைத் தவிர்த்தல்.

நண்பகல் வேளையில் நிழலான இடங்களில் தங்கியிருத்தல்.

வயது முதிர்ந்தவர்கள் மற்றும் சிறுவர்கள் மீது கூடுதல் கவனம் செலுத்துதல்.

வானிலை மாற்றங்கள் குறித்து பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அதிகாரிகள் மேலும் கேட்டுக் கொண்டுள்ளனர்.



# வினாத்தாள் மாணவர்களை தோல்வியடையச் செய்யும்

## 81 வயது பரீட்சார்த்தி விடுத்துள்ள சவால்

இலங்கையின் தேசிய கல்வி முறைமை மற்றும் கணிதப் பாட மதிப்பீட்டு முறையின் தரம் குறித்து, இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 81 வயதான நிமல் சில்வா எனும் முதியவர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.



கிரிபேரிய பிரதேசத்தைச் சேர்ந்த இவர், தனது முதிர்ந்த வயதிலும் பரீட்சைக்குத் தோற்றியமை தனிப்பட்ட சாதனைக்காக அல்ல, மாறாக வீழ்ச்சியடைந்து வரும் கல்வி முறைமைக்கான ஆதாரங்களைத் திரட்டுவதற்காகவே எனத் தெரிவித்துள்ளார்.

கணிதப் பாடத்திற்கான ஒரு புத்தகத்தையே எழுதியுள்ள நிமல் சில்வா, 2025 ஆம் ஆண்டுக்கான கணித வினாத்தாள் பாரிய பிழைகளைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார்.

"இந்த வினாத்தாளில் ஒரேயொரு உண்மையான எண்கணித கேள்வி மட்டுமே உள்ளது. ஏனையவை பிழைகளால் நிறைந்துள்ளன" என அவர் சாடியுள்ளார்.

இந்த வினாத்தாள் மாணவர்களின் அறிவைச் சோதிப்பதை விட, அவர்களைத் தோல்வியடையச் செய்யும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

"ஜனாதிபதி, பிரதமர் மற்றும் கல்வி உயர் அதிகாரிகளுக்கு நான் சவால் விடுகிறேன். உங்களால் இந்த வினாத்தாளுக்கு விடையளிக்க முடியுமா எனப் பாருங்கள்" என அவர் அழைப்புவிடுத்துள்ளார்.

கடந்த காலங்களில் இருந்ததைப் போல எண்கணிதம், இயற்கணிதம் மற்றும் வடிவியல் போன்ற பாடங்கள் தனித்தனியாக ஆழமாகக் கற்பிக்கப்படுவதில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

கணித அறிவின் வீழ்ச்சியானது மாணவர்களிடையே தர்க்கரீதியான சிந்தனையைக் குறைப்பதாகவும், இதுவே நாட்டில் குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் பாவனை அதிகரிக்கக் காரணம் என்றும் அவர் வாதிடுகிறார்.

இளம் பிள்ளைகள் மீதான கல்வி அழுத்தத்தைக் குறைக்க ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை ரத்து செய்ய வேண்டும் என்றும் அதற்குப் பதிலாக ஒழுக்க விழுமியங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிராமப்புற பாடசாலைகளில் நவீன ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துவதுடன், ஆசிரியர் நியமனங்களில் கடுமையான தரக்கட்டுப்பாடுகளைப் பின்பற்ற வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

2025 ஆம் ஆண்டு கணித வினாத்தாளில் தான் கண்டறிந்த தொழில்நுட்ப ரீதியான பிழைகள் குறித்த விரிவான அறிக்கை ஒன்றைத் தயாரித்து வருவதாகவும், அதனை பரீட்சை திணைக்களம் மற்றும் பிரதமரின் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்க உள்ளதாகவும் நிமல் சில்வா உறுதிப்படுத்தியுள்ளார்.

# மின்சார சபை மறுசீரமைப்புக்கு எதிராக விரைவில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கை

## மின்சார பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்தமையை தொடர்ந்து பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக மின்சார பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் கோசல அபேசிங்க தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

புதிய திட்டத்தின் கீழ் 6 நிறுவனங்கள் உருவாக்கப்படவுள்ளன. அதன் படி, இந்த நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுக்காக மாத்திரம் மாதம் ஒன்றுக்கு 180 லட்சம் ரூபா செலவிடப்படும். 15 லட்சம் ரூபா செலவை அதிகம் எனக் கூறிவிட்டு, 180 லட்சம் ரூபா செலவை ஏற்க அரசாங்கம் தயாராவது ஏன் என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மின்சார சபையை இரத்து செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை எதிர்வரும் 28 ஆம் திகதி வெளியிடுவதற்கு அமைச்சின் செயலாளர் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத்திட்டத்தை அரசாங்கம் தன்னிச்சையாக முன்னெடுத்தால், சாதாரண தரப் பரீட்சை நிறைவடைந்தமையை தொடர்ந்து ஒட்டுமொத்த மின்சார சபை ஊழியர்களும் பாரிய வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்குவார்கள் என அவர் தெரிவித்தார்.

# எனக்கும் ஸ்டாலினுக்கும் இடையில் நடக்கின்ற போர் தான் இந்த தேர்தல்

## வேலூரில் விஜய் ஆவேச உரை



“தற்போது நடக்க இருக்கும் சட்டப் பேரவை தேர்தல், தமிழ்நாட்டு மக்களுக்கும் ஊழல், லஞ்சம், நிர்வாகத்தை சரியாக செய்யாத முதல்வர் ஸ்டாலின் ஆட்சிக்கும் இடையே நடக்கும் போர். அதாவது, விஜய்க்கும், ஸ்டாலின் சாருக்கும் இடையே நடைபெறும் போர்.”

– இவ்வாறு த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

த.வெ.க. தலைவர் விஜய்யின் நிர்வாகிகள் சந்திப்புக் கூட்டம் வேலூர் மாவட்டம், அகரம்சேரியில் நேற்று திங்கள் கிழமை நடைபெற்றது. அந்தச் சந்திப்புக்குப் பின்னர் த.வெ.க. நிர்வாகிகளை உறுதிமொழி ஏற்க வைத்தார் விஜய். அதில், “எங்களை யாரும் விலைக்கு வாங்க முடியாது. யாரை நம்பியும் ஏமாற மாட்டோம். எங்கள் வார்த்தையில் இருந்து மாற மாட்டோம்” என தெரிவித்தார். பின்னர் விஜய் உரையாற்றுகையில்,

“மக்களை நேசிக்கிற ஒரு சரியான தலைமை இல்லாததால், முதல்வர் ஸ்டாலின் கொடுத்த பொய்யான வாக்குறுதிகளை நம்பி மக்கள் ஏமாந்தனர். இன்று மக்களை நேசிக்கும் இயக்கமாக த.வெ.க. வந்துள்ளது.

மக்களை அவரவர் ஊரில் வந்து பார்க்கவே விருப்பம். ஆனால் நம்மை சுற்றி நடக்கும் பல்வேறு சூழ்ச்சிகளால் மக்களை சந்திக்க முடியவில்லை. நமது ஆட்சி அமைந்ததும், ஒவ்வொரு கிராமத்துக்கும் நேரடியாக வந்து மக்களை சந்திக்கிறேன்.

தற்போது நடக்க இருக்கும் சட்டப் பேரவை தேர்தல், தமிழ்நாட்டு மக்களுக்கும் ஊழல், லஞ்சம், நிர்வாகத்தை சரியாக செய்யாத உங்கள் ஆட்சிக்கும் நடக்கும் போர். விஜய்க்கும் ஸ்டாலின் சாருக்கும் இடையே நடைபெறும் போர் தான் இந்த தேர்தல். தீய சக்தி திமுக, தூய சக்தி தவெகவுக்கு இடையேயான போர்.

தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கும், தமிழ்நாட்டுக்கும் என்.டி.ஏ.க்குவுமான தேர்தல் என முதல்வர் ஸ்டாலின் பேசி வருகிறார். இப்போது நடக்கவிருப்பது நாடாளுமன்றத் தேர்தலா, பிரதமர் பதவிக் கான தேர்தலா முதல்வர் சார்? எந்த தேர்தலை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என நம் மக்களுக்கு தெளிவாகத் தெரியும். த.வெ.கவுக்கு எதிரி தி.மு.க. தான்.

தமிழ்நாடுதான் விஜய் விஜய்தான் தமிழ்நாடு. விஜய்யும் மக்களும் வேறு வேறு இல்லை, விஜய்யும் மக்களும் உடலும் உயிரும் போல. மக்களை நேசிக்கிற விஜய் வேண்டுமா? மக்கள் விரோத ஆட்சி செய்கிற ஸ்டாலின் சார் வேண்டுமா?

எனக்கு ஒரு புதிய நண்பர் கிடைத்துள்ளார். அது முதல்வர் ஸ்டாலின்தான். ஒரு செய்தியாளர் சந்திப்பில், ‘எனக்கு யாரும் எதிரி கிடையாது’ என முதல்வர் கூறியிருந்தார். அப்படியென்றால், கரூர் விஷயத்தில் என் மேல் ஏன் பழி சுமத்தினீர்கள்.

உங்கள் உண்மையான நண்பர் லஞ்சம் , ஊழல் தான். அரசியலுக்கு வருவதற்கு முன்பு உங்கள் சொத்து மதிப்பு என்ன? அரசியலுக்கு வந்த பிறகு உங்கள் சொத்து மதிப்பு என்ன? தமிழகத்துக்கு தேவையில்லாத ஆட்சி தி.மு.க.

அறிவாலயம் பக்கம் யாராவது நடந்து போனால் கூட, ஏன் நிழலுக்கு ஒதுங்கினால் கூட கூட்டணிக்கு சேர்த்துக் கொள்கிறார்கள். தி.மு.க. கூட்டணிக்கு நான் ‘கல்லாப்பெட்டி கூட்டணி’ என பெயர் வைத்துள்ளேன்.

தமிழகம் சூப்பர் ஸ்டார் மாநிலம்–தான். அது காமராஜர், அண்ணா, எம்.ஜி.ஆர் காலத்தில்தான். இன்றைக்கு சூப்பர் “ஸ்டாண்ட்–அப் கொமெடிக்காரர்“ நடத்தும் மாநிலமாக மாறிவிட்டது. தீய சக்திக்கு முடிவு கட்ட இந்தத் தேர்தலை பயன்படுத்துங்கள். விசிலுக்கு ஓட்டு போட்டு தீய சக்திக்கு முடிவு கட்டுங்கள். இது விசில் புரட்சி தேர்தல்.

அனைத்து கட்சிகளும் சேர்ந்து என்னை எதிர்க்கின்றன. அனைவருக்கும் ஒன்றை சொல்லிக் கொள்கிறேன். த.வெ.க, தி.மு.க. இடையில் மட்டும் தான் தேர்தலில் போட்டி. “சீரியஸாக“ போட்டி நடக்கும்போது “கொமெடிக்கு“ இங்கே இடமில்லை. ஒருசிலர் அவர்களாகவே வந்து வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு பேசுகிறார்கள்.

தமிழ்நாட்டில்பெண்களுக்குபாதுகாப்பு கொட்டிக் கிடக்கிறது என்கிறார்களே. கேட்கிறவர்கள் எல்லாரும் கேசரி சாப்பிடுறவர்கள் என நினைத்தீர்களா?

மாதம் ஒரு முறை மின் கட்டணம் கட்டுவது போல ஏற்பாடு செய்வதாக சொன்னீர்களே. செய்தீர்களா? தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு காணாமல் போய்விட்டது. நிறைய கிராமங்களில் பஸ் வசதி இல்லை என்று சொன்னால் ஒட்டுமொத்த தி.மு.க அரசும் கத்திக் கொண்டு வந்து விடுவார்கள். நாங்கள் பஸ் விடாத கிராமங்களே இல்லை என சொல்வார்கள். பல மலை கிராமங்களில் பஸ் வசதி, மருத்துவமனை வசதி இல்லை.” என்று தெரிவித்தார்.

# ஜார்க்கண்டில் ஏர் அம்புலன்ஸ் விமானம் விழுந்து நொருங்கியதில் ஒருவர் மரணம்

ஜார்க்கண்ட் மாநிலம் ராஞ்சியிலிருந்து டில்லி நோக்கிச் சென்ற ஏர் அம்புலன்ஸ் விமானம் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த ஏழு பேரில் ஒருவர் உயிரிழந்துள்ளார். எஞ்சிய 6 பேரும் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

ராஞ்சி விமான நிலையத்திலிருந்து நேற்று திங்கள் கிழமை மாலை டில்லி நோக்கிப் புறப்பட்ட இந்த விமானம், புறப்பட்ட சிறிது நேரத்திலேயே கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்தது. தேடுதல் பணிகளுக்குப் பிறகு, விமானம் சத்ரா மாவட்டத்தின் சிமரியா பொலிஸ் எல்லைக்குட்பட்ட கர்மதந்த் கிராமத்திற்கு அருகிலுள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் விழுந்து நொருங்கியது கண்டுபிடிக்கப்பட்டது. ராஞ்சி விமான நிலைய இயக்குநர் இந்த விபத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

விமானத்தில் ஒரு நோயாளி, மருத்துவர்கள் மற்றும் விமானப் பணியாளர்கள் என மொத்தம் 07 பேர் இருந்தனர் என முதற்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



விபத்து நடந்த இடத்திற்கு விரைந்த மீட்புப் படையினர் மற்றும் உள்ளூர் மக்கள், காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர்.

உயிரிழந்தவர் யார் என்ற விவரம் இன்னும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. விபத்து நடந்த இடம் அடர்ந்த வனப்பகுதி என்பதால் மீட்புப் பணிகளில் சவால்கள் நீடித்து வருகின்றன.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விபத்து நடந்ததா அல்லது மோசமான வானிலை காரணமா என்பது குறித்து சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் விசாரணையைத் தொடங்கியுள்ளது.

விபத்துக்குள்ளான விமானத்தின் சிதைந்த பாகங்களை ஆய்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. காய மடைந்தவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுவதால், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்ற அச்சம் நிலவுகிறது.

# புடின் மூன்றாம் உலகப் போரை ஏற்கெனவே தொடங்கிவிட்டார்

## ஜெலன்ஸ்கி தெரிவிப்பு



மூன்றாம் உலகப் போரை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஏற்கெனவே தொடங்கிவிட்டதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைனுக்கு எதிரான போரை ரஷ்யா தொடங்கியது. இன்றுடன் போர் நான்கு ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இதை முன்னிட்டு பி.பி.சி. செய்தி நிறுவனத்துக்கு தான் அளித்த பேட்டியின் சுருக்கத்தை, ஜெலன்ஸ்கி தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“வான் பாதுகாப்பு என்பது இன்று மிகவும் சவாலான பிரச்சினையாக உள்ளது. துரதிருஷ்டவசமாக, வான் பாதுகாப்பு அமைப்புகளை நாங்களே தயாரிக்க அனுமதிக்கும் உரிமங்களை எங்கள் நட்பு நாடுகள் எங்களுக்கு வழங்கவில்லை. குறைந்தபட்சம் ஏற்கெனவே உள்ள வான் பாதுகாப்பு அமைப்புகளுக்கான ஏவுகணைகளை தயாரிக்க வேண்டும். இதுவரை நாங்கள் அதில் வெற்றி பெறவில்லை.

இந்தப் போரில் உக்ரைனை வலிமையாக்க வேண்டும் என்றால், எங்கள் வான் பரப்பை மூட வேண்டும், பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டும், குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல வேண்டும், பொருளாதாரம் செயல்பட வேண்டும், பணப்புழக்கம் இருக்க வேண்டும், வரிகள் மூலம் கிடைக்கும் பணம் இராணுவத்துக்குச் செலவிடப்பட வேண்டும். இந்த வழியில்தான் நாங்கள் எங்கள் இராணுவத்தை பலப்படுத்துகிறோம். துரதிருஷ்டவசமாக இது இன்னும் நடக்கவில்லை. ஏவுகணைகளுக்கான உரிமங்களாவது எங்களுக்குத் தேவை.

மூன்றாம் உலகப் போரைப் பற்றி பல்வேறு கருத்துகள் இருக்கின்றன. புடின் அதை ஏற்கெனவே தொடங்கிவிட்டார் என்றே நான் நம்புகிறேன். கேள்வி என்னவென்றால், அவர் எவ்வளவு நிலப்பரப்பை கைப்பற்ற முடியும் என்பதும் அவரை தடுப்பது எப்படி என்பதும் தான். ரஷ்யா வெற்றி பெறுவதை தடுக்க வேண்டும். ஏனெனில், ரஷ்யா தனது சொந்த உலகத்தை மற்றவர்கள் மீது திணிக்கிறது. மக்கள் தங்கள் வாழ்க்கையை தாங்களே தேர்வு செய்வதை மாற்றுகிறது. அதனால்தான், புடின் மூன்றாம் உலகப் போரை ஏற்கெனவே தொடங்கிவிட்டதாக நான் நம்புகிறேன்.

இது பரந்த, முழு அளவிலான மூன்றாம் உலகப் போராக மாறுவதை நாங்கள்தான் தடுத்துக் கொண்டிருக்கிறோம். புடினை தடுக்கும் புறக்காவல் நிலையமாக உக்ரைன் இன்று உள்ளது.

இன்று, ஐரோப்பா எங்களுக்கு நிதி உதவி அளிக்கிறது. அதற்காக நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அமெரிக்காவிடம் இருந்து PURL என்ற வான் பாதுகாப்பு அமைப்பை வாங்கும் திட்டத்துக்கு ஐரோப்பா நிதி உதவி அளிக்கிறது. ஆனால், இது போதுமானதா என்றால், நான் மாறுபடுகிறேன்.

ஒரு நாட்டுக்கு கணிசமான நிதியை ஒதுக்குவதால், போதுமான அளவு நிதி உதவியை அளிப்பதாகக் கூறும் நாடுகள் உள்ளன. மிகக் குறைவாகனே நிதி ஒதுக்கும் நாடுகளும் உள்ளன. உதவியை தடுப்பவர்களும் இருக்கிறார்கள். எங்களுக்கு தீங்கு விளைப்பவர்களைவிட இவர்கள் மேலானவர்கள்.

ஒட்டுமொத்த அளவில், வழங்கப்படும் நிதி உதவி போதுமானதா என்றால் இல்லை என்பதுதான் எனது பதில், ஆனால், ஐரோப்பாவைப் பொறுத்த வரை அது உக்ரைனுக்கும் உக்ரைன் மக்களுக்கும் ஆதரவாக இருந்து உதவி வருகிறது. ஆனால், எங்களுக்கு இன்னும் அதிக தேவை உள்ளது. ஏனெனில், ரஷ்யா அளவுக்கு எங்களிடம் ஆயுதங்கள் இல்லை.

இராணுவ வீரர்கள் குறித்து நாம் பேசும்போது, ஆட்சேர்ப்புக்குப் பதிலாக ஒப்பந்தங்களுக்குமாறும்போதுஐரோப்பா எங்களுக்கு உதவ முடியும். புடின் இதைத்தான் செய்கிறார். அவர் படையில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் ஒப்பந்த அடிப்படையில் பணம் செலுத்துகிறார். நாங்களும் இதைச் செய்ய விரும்புகிறோம். ஆனால், எங்களிடம் போதுமான அளவு நிதி இல்லை. இதற்கு ஐரோப்பியர்கள் உதவ முடியும். இதற்கு இன்னும் ஐரோப்பியர்கள் இன்னும் நிதி உதவி அளிக்கவில்லை.” என்று தெரிவித்துள்ளார்.

# ஈரானை விட்டு உடனடியாக வெளியேற இந்தியர்களுக்கு தூதரகம் அறிவுறுத்தல்

ஈரானில் பதற்றம் அதிகரித்திருப்பதால் அந்நாட்டை விட்டு உடனடியாக வெளியேறுமாறு அங்குள்ள இந்தியர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“கடந்த ஜனவரி 5 ஆம் திகதி இந்திய அரசு வெளியிட்ட ஆலோசனையின் தொடர்ச்சியாக இந்த அறிக்கை வெளியிடப்படுகிறது. ஈரானில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அங்குள்ள இந்தியர்கள் குறிப்பாக மாணவர்கள், யாத்ரீகர்கள், வணிகர்கள்,சுற்றுலாப்பயணிகள்முதலானோர் வணிக விமானங்கள் உள்ளிட்ட கிடைக்கக் கூடிய போக்குவரத்து வழிகள் மூலம் ஈரானை விட்டு வெளியேற அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஈரானில் உள்ள இந்தியர்களுக்கு கடந்த ஜனவரி 14 ஆம் திகதி தெரிவிக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றன. அனைத்து இந்திய குடிமக்களும், இந்திய தகவல் தொடர்பு அதிகாரிகளும் உரிய எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

போராட்டங்கள் அல்லது ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் பகுதிகளுக்குச்



செல்வதைத் தவிர்க்க வேண்டும். ஈரானில் உள்ள இந்திய தூதரகத்துடன் தொடர்பில் இருக்க வேண்டும். அவசர தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ளஉள்ளூர்ஊடகங்களில்வெளியாகும் செய்திகளை அறிந்து கொள்ள வேண்டும்.

தெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகத்தை, +989128109115; +989128109109; +989128109102; +989932179359 ஆகிய தொலைபேசி எண்கள் மற்றும் cons.tehran@mea.gov.in என்ற இமெயில் முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

ஈரானில் இருக்கும் இந்தியர்களில் யாரேனும் இந்திய தூதரகத்தில் பதிவு செய்யாமல் இருந்தால், அவர்கள் meaers.com/request/home என்ற இணைப்பின் மூலம் தங்களை பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த இணைப்பு இந்திய தூதரக இணையதளத்திலும் உள்ளது.

ஈரானில் இணைய தடைகள் காரணமாக இங்குள்ள இந்தியர்களால் பதிவு செய்ய முடியாவிட்டால், இந்தியாவில் உள்ள அவர்களது குடும்பத்தினர் அவர்களுக்காக பதிவு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள்- 24.02.2026




உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்யும் நாளாக அமையும். பணம் அல்லது வேலை தொடர்பான புது முயற்சியில் இன்று நீங்கள் இறங்கலாம்.

உங்கள் பணியில் உற்சாகமான கட்டம். பணிகளை அமைதியாக கையாள வேண்டும். இதன் மூலம் பணியில் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையான பேச்சை பராமரிப்பீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். எதிர்கால நலன் கருதி இன்று சிறப்பாக திட்டமிடுவீர்கள்.

இன்று எந்தவிதமான ஆரோக்கியப் பிரச்சினையும் காணப்படாது.




இன்று பல வாய்ப்புகள் கிடைக்கலாம். அதனை முழுவதுமாக நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

இன்று அர்ப்பணிப்புடன், உங்கள் முயற்சி அனைத்தையும் செலுத்தி சிறப்பாக பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளையும் எளிதாக முடிக்கும் புரிந்துணர்வு உங்களிடம் காணப்படும்.

உங்கள் மனதில் அன்பு உணர்வு பொங்கிப் பெருகும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நிதி வளர்ச்சி சமூகமாக இருக்கும். உங்கள் குடும்ப நலனுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். வலிமையுடன் காணப்படுவீர்கள்.




இன்றைய அன்றாட நடவடிக்கைகளில் எச்சரிக்கையான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். இன்று வளர்ச்சிக்கு அனுகூலமான நாள் அல்ல.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக கருதுவீர்கள். உங்கள் பணிகளில் தாமதம் காணப்படும். சிறப்பாக பணியாற்ற திட்டமிட்டு பணியாற்றுங்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. நல்லுறவைப் பராமரிப்பதில் தான் உறவின் நிலை சார்ந்துள்ளது. இதன் மூலம் இருவரிடையே உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

குடும்பத்திற்காக தேவையற்ற செலவு ஏற்பட்டு பணம் வீணாகலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். திட்டமிட்டு அதன்படி பணத்தை செலவு செய்யுங்கள்.இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று சமநிலையான நாளாக இருக்காது. சில சூழ்நிலைகளை சமாளிப்பதன் மூலம் விஷயங்களை நன்கு புரிந்து கொள்ள இயலும். உங்களுக்கு இழப்புகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மேலதிகாரிகளுடனான உறவு நல்லுறவாக இருக்காது. மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவதை தவிர்த்திடுங்கள். அவர் சொல்வதைக் கேளுங்கள். இதனால் இருவரிடையே அன்பும் நல்லுறவும் வளரும்.

இன்று பண வரவு அதிகமாக இருக்காது. பணத்தை சேமிக்க வேண்டும். பணத்தை பாதுகாப்பதன் மூலம் இழப்பை தடுக்கலாம்.ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி உங்களுக்கு கவலை அளிக்கும்.




உங்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதன் மூலம் நீங்கள் பிரச்சினைகளை குறைக்கலாம். கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதலும் நிம்மதியும் கிடைக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும். எனவே பணிகளை திட்டமிட்டு ஒழுங்கு படுத்திக் கொள்வது சிறந்தது.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். உங்கள் துணையுடன் கோபமாக நடந்து கொள்வீர்கள். உங்களிடம் மகிழ்ச்சியான மன நிலை காணப்படாது. இதனால் இருவரிடையே முரண்பாடு ஏற்படும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய திட்டமிட வேண்டும்.

கண் தொற்று பாதிப்பு காணப்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். இல்லையெனில் நற்பலன்கள் தாமதமாக விளையும். நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

பணியைப் பொறுத்த வரை கூடுதல் முயற்சி எடுக்க வேண்டும். பணி சம்பந்தமான பயணம் மேற்கொள்ள நேரும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற வாக்குவாதங்கள் நடத்துவீர்கள்.எனவே பேசும் போது கட்டுப்பாடு அவசியம்.

இன்று செழிப்பான நிதிநிலைக்கு உகந்த நாள் அல்ல. இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் சம்பாதிக்கும் திறன் குறைந்து காணப்படும்.




நீங்கள் சிறப்பாக செயல் புரிந்து வெற்றி பெறுவீர்கள். உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்வீர்கள்.

பணியிடத்தில் நன்மை விளையும். உங்கள் திறமையை நிரூபிக்க பல வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்தை உங்கள் துணையிடம் வெளிப்படையாக கூறுவீர்கள். உங்கள் நம்பிக்கை உணர்வின் மூலம் இது சாத்தியம் ஆகும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சேமிப்பு பழக்கத்தை மேற்கொள்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். திருப்திகரமான, நகைச்சுவைபூர்வமான மனநிலை காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்களின் வளர்ச்சி மற்றும் வெற்றி குறித்த கவலை காணப்படும். உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொண்டு முன்னேற விரும்புவீர்கள். இது உங்களுக்கு திருப்திகரமான உணர்வை அளிக்கும்.

பணியிடத்தில் சவால்கள் காணப்பட்டாலும் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் ஒத்துப் போக முடியாத வகையில் கருத்து வேறுபாடு ஏற்படும். எனவே அவருடன் அமர்ந்து அதனை தீர்த்துக் கொள்வது சிறந்தது. இன்று செலவுகள் அதிகமாகக் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுப்படுத்தாவிட்டால் அதிக செலவுகளை சமாளிக்க இயலாது.

# இன்றைய ராசி பலன்கள்- 24.02.2026




வெளியிடங்களுக்கு சென்று வருவதன் மூலம் மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் செயல்களில் உணர்ச்சி வசப்படுவதைவிட யதார்த்தமாக இருப்பது நல்லது. இன்று அமைதியாக இருக்க வேண்டும்.

எப்பொழுதும் போல பணியாற்றினால் பணியிடத்தில் வெற்றி பெற இயலாது. சிறப்பாக பணியாற்ற உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். பணியில் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்தும் மனநிலையில் இருக்க மாட்டீர்கள். உங்கள் துணையிடம் நகைச்சுவை அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.




இன்று அதைரியம் உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். மனதில் நம்பிக்கையும் உறுதியும் கொள்ளுங்கள். எதிர்மறை எண்ணங்களை நீக்கி நேர்மறை எண்ணங்களை மேற்கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. திட்டமிட்டு பணியாற்றுவது நல்லது.

மனக்குழப்பம் காரணமாக கோபமான மனநிலையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி பாதிக்கப்படும்.

இன்று தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு சுமையாக தெரியும்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியமாய் இருக்க உடற் பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




இன்று உங்களுக்கு பயன் தரும் நல்ல மாற்றங்களைக் காணலாம். உங்கள் நகைச்சுவை போக்கு காரணமாக நன்மை விளையும்.

வேலை மாற்றம் அல்லது அது தொடர்பான பயணம் காணப்படுகின்றது. உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும்.

உங்களின் மகிழ்ச்சியான நகைச்சுவையான உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்தி நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் துணையும் மகிழ்ந்து பதிலுக்கு அன்பை செலுத்துவார்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். வங்கியில் சிறந்த பண இருப்பை பராமரிப்பீர்கள். .இன்று ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. ஆரோக்கியத்தில் பெரிய குறைபாடு காணப்படாது. என்றாலும் உடன் பிறந்தவர் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.



உங்கள் செயல்களை விரைந்து ஆற்றுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு முன்னேற்றகரமான பலன்களை அளிக்கும்.

உங்கள் பணியின் மூலம் நற்பெயர் பெறுவீர்கள். உங்களின் சுய முயற்சி மற்றும் புத்திசாலித்தனம் காரணமாக இது சாத்தியம் ஆகும்.

உங்கள் துணையிடம் நம்பிக்கையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். உங்கள் துணை கைபேசி வாங்கித் தரக் கோருவார். அவரது தேவையை பூர்த்தி செய்வீர்கள்.

நிதி நிலைமை மகிழ்ச்சி தரும் வகையில் செழிப்பாக இருக்கும். இன்று கணிசமான தொகை லாபமாகக் கிடைக்கும்.



# 2 கிலோ வெளிநாட்டுக் கஞ்சாவுடன் சாலியவெவவில் சந்தேகநபர் கைது

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

இலங்கைக் கடற்படை, மன்னார் குற்றப் புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை புத்தளம் சாலியவெவ பகுதியில் நடத்தப் பட்ட சிறப்பு சோதனை நடவடிக்கையின் போது சுமார் இரண்டு கிலோகிராம் வெளிநாட்டு கஞ்சாவுடன் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ஒரு மோட்டார் சைக்கிள் கைப்பற்றப்பட்டது.

புத்தளம் சாலியவெவ பகுதியில் வடமத்திய கடற்படை கட்டளையின், பண்டுகாபய நிறுவனம் மற்றும் மன்னார் குற்றப் புலனாய்வுப் பிரிவு நடத்திய இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, அந்தப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான ஒரு வீடு சோதனையிடப் பட்டது. அங்கு, வீட்டில் இருந்த ஒரு நபர் சுமார் இரண்டு கிலோகிராம் வெளிநாட்டு கஞ்சா மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் புத்தளம், சாலியவெவ பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார். மேலும், சந்தேக நபர், வெளிநாட்டு கஞ்சா மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சாலியவெவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப பட்டார்.